Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

பட்டு, பருத்திப் பிடவைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

டயரும்ஸ்

மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 4 | யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 15 ஆம் நாள் | துல்கஃதா 23 | (29-4-62) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 77

# மூதூரில் தமிழரசுக் கட்சி தலைவர்கள் பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன

## செயற்குழு நாளை கூடி அபேட்சகரைத் தெரிவு செய்யும்

திருக்கோணமலை, சனி

மூதூர்த் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு எந்த நிலையில் இருக்கிறதென்பதையும் தமிழரசுக் கட்சியின் அபேட்சகராக ஜனுப் முகம்மது அலியை நிறுத்தலாமா என்பதுபற்றியும் நேரில் அறிந்து கொள்வதற்காகத் தலைவர் செல்வநாயகம், திரு. இராசதுரை, திரு. இராஜவரோதயம், செனட்டர் மாணிக்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் இன்று மூதூர்த் தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தனர்.

மூதூர்த் தொகுதியின் பல இடங்களிலும் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடும் பிரசாரக் கூட்டங்களையும் இன்று அவர்கள் ஆரம்பித்தனர். நாளை நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தின்பின் மூதூர்த்தொகுதியில் கட்சி நிறுத்தவிருக்கும் அபேட்சகரின் பெயர் வெளியிடப்படும்.

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இன்று காலை திருக்கோணமலை வந்து சேர்ந்தபொழுது மூதூர் முன்னுள் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மது அலியும் மற்றும் பலரும் அவர்களுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார்கள்.

மூதூர் உபதேர்தலில் தமிழரசுக் கட்சி நிறுத்தவிருக்கும் அபேட்சகருக்கு ஆதரவுதேடுவதற்காக கட்சித்தலைவர்கள் இரண்டு கோஷ்டியாகப்பிரிந்து மூதூர்த் தொகுதிக்குச் சென்றுள்ளனர்.

தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை, ஜனுப் மசூர் மௌலானு ஆகியோர் ஜனுப் முகம்மது அலியுடன் கிண்ணியாவுக்குச் சென்றுள்ளனர்.

டாக்டர் நாகநாதனும் செனட்டர் மாணிக்கமும கந்தலாய் ரயில் நிலையத்தில் தமிழரசுக் கட்சியின் கந்தளாய்க் கிளைத் தலைவர் திரு. இரத்தின சபாபதியால் வரவேற்கப்பட்டனர். அங்கிருந்து திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். ராஜவரோதயத்துடன் மூதூருக்குச் சென்றனர்.

### பிரசாரம் ஆரம்பம்

மூதூர்த் தொகுதி முதலாவது எம். பி. யாகப் பதவிவகித்துசென்ற வருடம் நடைபெற்ற

(12-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு 29—4—62

## இன்பமே எந்நாளும்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று முழங்கிய நாவுக்கரசரின் புனிதத் திருநாள் இன்றாகும்.

ஆனல் வாழ்க்கையிலே திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கும் சோதனைகளுக்கும் கணக்கில்லை. கல்லுடன் கட்டிக் கடலில் தள்ளினார்கள். சுண்ணும்புக் காளவாய் என்னப்படும் நீற்றறையில் அவரைப் போட்டனர். யானையைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். இன்னும் எவ்வளவு துன்பங்களோ, இவற்றுடன் ஒப்பிடுகையில், நம்மில் பலரது கஷ்டங்களும் மிகக் குறைவாகவே இருக்கும். என்றாலும் அவரை இவை எல்லாம் துன்பங்களாகத் தாக்கவில்லை. எந்நாளும் இன்பமாகவே இருந்துள்ளார். அதனாலேயே அவர் அப்படிப் பாடிவைக்க முடிந்தது.

துன்பத்தை இன்பமாக அவர் மாற்றியதன் இரகசியமென்ன? நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் என்று வீரமுழக்கம் செய்ய அவருக்கு அவ்வளவு துணிச்சல் எப்படி ஏற்பட்டது?

"கோமாற்கே என்றும் மீளா ஆளாகி," "கொய்மலர்ச் சேவடி இணையைக் குறுகியதால்" தான் என்று விளக்குகிறார் அவர். தெய்வத் துணையாலும் அருளாலும் தான் மலைபோன்ற சோதனைகளும் அவருக்குப் பனிபோல மறைய முடிந்ததென்றார்.

விஞ்ஞானம் இன்று நம்மை அணுகுண்டு ஆபத்துக்கு உட்படுத்தியுள்ளது. அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டி போட்டுக்கொண்டு அணுகுண்டுகளை வெடிக்கின்றன. நாமெல்லாம் எவ்வளவோ ஆட்சேபித்தும் இரண்டு "கே"க்களும் கேட்க மறுக்கின்றனர். இந்த ஆபத்து நம்மை எங்கு கொண்டு செல்லப் போகிறதோ? இதைத் தவிர்க்க நாம் என்ன செய்யலாம்? இது முக்கிய கேள்வி.

சென்ற யுத்தத்தின் போது அணு குண்டினால் அழிந்த ஹிரோஷிமா நகரில் ஆயிரக்கணக்கானவர் ஆட்சேப ஆர்ப்பாட்டம் செய்து பிரார்த்தனைகளில் ஈடுபட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. பிரார்த்தனையால் எதுவும் சாதிக்கலாமென்பது காந்தி அடிகளது மாறாத நம்பிக்கை. பிரார்த்தனையாலேயே அவர் நாட்டுக்கு அரசியல் விடுதலை பெற்றுத்தந்தார். தெய்வ அருள்மூலம் அவர் சாதித்துள்ள காரியங்கள் வியப்பளிப்பன. "நாமார்க்கும் குடியல்லோம்...." என்ற நாவுக்கரசரின் பாவுக்கு, காந்தி அடிகளின் வாழ்க்கை ஓர் இலக்கியமாகத் திகழ்வதைப் பார்க்கின்றோம். எந்தத் துன்பங்களையும் தெய்வ பக்தியால், துணையால் இன்பமாக மாற்றிவிடலாமென்பதை இவ்விரு பெரியார்களின் வாழ்க்கை மூலமும் அறிந்த பின்பும் நம்மில் யாரும் எவ்வித துன்பத்தாலும் சங்கடப்படுவதாயின், அதற்கு யார் பொறுப்பு? அது அறிவுடைமையாகுமா?

## சமையலைப்போல் சமயமும் முக்கியமானது

### சைவாசிரியர்கள் விடுமுறைக் கழகத்தில் கி. வா. ஜகந்நாதன்

மட்டக்களப்பு, சனி

'சைவம் என்பது சிவம்; சிவம் என்பது அநாதி நித்தியம். ஆகவே சைவமும் அநாதி நித்தியமானது. மனித வாழ்வுக்கு சமயல் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல சமயமும் முக்கியமானது.'

இவ்வாறு மட்டக்களப்பு சைவாசிரியர்கள் விடுமுறைக் கழகத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கி. வா. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

காப்பியங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். இதன் பெயரே (தொல் - தொன்மை, பழமை) பழமையை எடுத்துக்காட்டுகிறது. பழமையும் பெருமையும் வாய்ந்த தொல்காப்பியத்தில் கூட, சிவத்தோடு சம்பந்தமாகிய சைவத்தின் பெருமை எடுத்தாளப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தத்தின் முதற்பகுதி சிவத்தோடு சம்பந்தமான முருகனைப் பற்றிக் கூறுவதைப் போல், சங்கநூல்களிலும் தன்மையால் முதன்மை பெற்றுவிளங்கும் திருமுருகாற்றுப் படையிலும் முருகனைப் பற்றிக் கூறப்படுகிறது. இவற்றிலிருந்து தமிழுக்கும் - சைவத்துக்குமுள்ள நெருங்கிய தொடர்பு நன்குவிளங்குகிறது.

கிழக்கு மாகாண உதவி வித்தியாதிபதி திரு. அங்லோ இராஜகாரியர் குத்துவிளக்கேற்றி விடுமுறைக்கழகத்தை ஆரம்பித்துவைத்தார். கவிஞர் திமிலைத்துமிலன் வரவேற்புப் பாடல் பாடினர். முதல்நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஞானசம்பந்தர் தலைமை தாங்கினர். மாலை நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட வித்தியாதரிசி திரு. சந்திரசேகரம் தலைமை தாங்கினர்.

ஆசிரிய கலாசாலை தமிழ் பேராசிரியர் பண்டிதர் செ. பூபாலபிள்ளை விடுமுறைக் கழகத்துக்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

உங்கள் மனைகளை அலங்கரிக்கத் தேவையான தளபாடங்களுக்கு

கொழும்பு பேணிச்சர் பலெஸ்

COLOMBO FURNITURE PALACE

196, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 16-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29-4-62) முதல் சித்திரை திங்கள் 22-ம் நாள் சனிக்கிழமை (5-5-62) வரை உள்ள பலன்கள்.

## மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் பாதம்)

இவர்களுக்கு இவ்வாரத்தில் விருப்பமற்ற பிரயாணங்கள், வீண் மனத்தாபங்கள், இடமாறுதல், குடும்ப நிம்மதி, கௌரவம், தேகாரோக்கியம் குறைதல், நிதானமின்மை, கல்விச் சிறப்பு, சகோதரர்களுக்கு நன்மை, உத்தியோக உயர்வு, மாதர்க்கு நலம், களத்திரத்திற்கு உடல்நோய், பிதாவுக்கு நலக்குறைவு, பெண்களுக்கு சுபகரும நிகழ்ச்சி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 29, மே 3, 4ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

## இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

சுகயீனம், பிரயாணம். செயல்கள் தடைப்படல், வர்த்தகருக்கு வியாபார மந்தம், உற்சாகம், நாணயவிருத்தி, குடும்பத்தில் சிக்கல்கள், உறவினர் பகை, பூமி பொருள் சேர்க்கை, பணலாபம், பிதாவுக்குத் தொழில் வெற்றி, தொழில் விருத்தி, வித்தைச் சிறப்பு, மனைவிக்கு லாபகரம், மூத்தசகோதரங்களுக்கு உடல் நலக் குறைவு. இவர்களுக்கு ஏப்ரல் 29, 30, மே 1, 2, 3 சுபதினங்களாகும்.

★

## மிதுன இராசி

மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்)

தொழில் வெற்றி, காரியச் சிறப்பு, பெரியோர் ஆதரவு, உத்தியோக உயர்வு, பதவி மாற்றம், அரசாங்க ஆதரவு, ஆரோக்கிய வளர்ச்சி, சுபமங்கள் செயல்கள், அலங்காரப் பொருள்களில் வீண் செலவு, சிறு நட்டங்கள், தெய்வ வழிபாடு, வியாபாரவிருத்தி ஆதாயம், நண்பரால் பொருள் வரவு, பிரயாணம், வீண்செலவுகள் காணப்படுகின்றன, குழந்தைகள், மாதுருவர்க்கம், மனைவி உடல்நலக் குறைவுகள். இவர்களுக்கு மே மாதம 1, 2, 4ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

உத்தியோகத் துறையினருக்கும் வர்த்தகருக்கும் பதவி ஏற்றமும், வியாபார விருத்தியும், நாணயம் — நம்பிக்கை, புதிய முயற்சிகளில் வெற்றியும், மனஅமைதி ஆரோக்கியம் குன்றுதலும், தெய்வ வழிபாடு, வீண் விரயங்கள், பணச்செலவுகள், உடல்நலக் குறைவு, மனைவிக்கு பொருள் சேர்க்கை, பிதாவுக்கு மாதாவுக்கு நோய் தோன்றி மாறுதல், கல்வித்தடை, பெண்களுக்குக் குடும்பசுகக் குறைவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மேமாதம் 3, 4, 5 சுபதினங்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

தன்னம்பிக்கையின்மை, உறவினர் பகை, ஆரோக்கியம் குன்றல், முயற்சிகளில் வெறுப்பு, வீண்செலவு, பகை வளர்ச்சி, வர்த்தகருக்கு முயற்சித் தடை, நோய்துன்பங்களால் இடர், பெண்களால் தொல்லை, குடும்ப சச்சரவு, கீர்த்தி, கமத்தொழில் விருத்தி, களத்திரவழி பொருள்வரவு, திடீர் விபத்துக்களால் காயங்கள், வாரப் பிற்பகுதியில் வருமான உயர்வு, தொழிற்சிறப்பு, பதவி மதிப்பு. இவர்களுக்கு ஏப்ரல் 29, 30, மே 1, 5 சுபதினங்களாகும்.

★

## கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய.)

சுபசெய்திகள் கேட்டல், பிரயாணக் கஷ்டங்கள், உடல் நலக்கேடு, அரசு விரோதம், குடும்ப சச்சரவு, பணமுடை, உறவினருடன் விரோதம், உத்தியோகத்தில் நிம்மதியினம், வியாபாரத்தில் தொழில் மந்தம், பணமுடக்கம், சகோதரங்களுக்குக் கல்வித்தடையும் கமத்தொழிலில் மத்திமமான பலன் உண்டு. பெண்களுக்கு சுபகரும பேச்சுநடக்கும். இவர்களுக்கு ஏப்ரல் 29, 30, மே 2, 5 சுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய.)

பணமுடை, வீட்டு நிம்மதியினம், உடல்நலக் குறைவு, பிரயாணம், கடன்தொல்லை வர்த்தகருக்கு நாணய கஷ்டம், செல்வாக்குக் குன்றுதல், ஆரோக்கியம் குறைவும், பதவிமதிப்பு, வீட்டில் சுபகரும முயற்சிகள் நடத்தல், பெண்களுக்கு விவாகப்பேறு, மாணவருக்குக் கல்விவிருத்தி, ஆகியனவும் கால்நடைப்பேறு, கம விருத்தியும் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 29, மே மாதம் 1, 2, 4 சுபதினங்களாகும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய)

கடன் நீக்கம், நோய் நீங்கி ஆரோக்கியம், பாக்கிகள்வரவு, தொழில்வெற்றி, வர்த்தகத்தில் நாணயவிருத்தி, செல்வாக்கு, ஆதாயம், புதியன வெற்றி, குடும்பத்தில் பெண்களால் கஷ்டம், மக்களது உடல் நலக் குறைவு, மூத்த சகோதரம் - நண்பர் வாகன விபத்தில் சிக்கலாம். கல்வி விருத்தி. உத்தியோக மதிப்பும் உயர்ச்சியும், கமத்தொழில் விருத்தி, பெண்களுக்கு சுபகருமங்கள், பணவரவு, குடும்பசுகம் ஆகியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 3, 5 சுபதினங்களாகும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

உடல்நிலை பாதித்தல், பொருள்வளக்குறைவு, வழக்குவிவகாரங்கள், குடும்பசஞ்சலம், தொழில் தடை, வியாபாரத்தில் பணமுடக்கம், தொழில் அபிவிருத்திக்கு இயலாதவாறு பல தொல்லைகளும்தோன்றல், கௌரவக்குறைவு, உடன்பிறந்தோருக்கு அசுபபலன், பிதா மாதா மனைவிக்கு நலம், வித்தைப் பயிற்சி வெற்றி, குடும்பத்தில் சுபமுயற்சிகள், மாதாவுக்கு உடல் நலக் குறைவு, பெண்களுக்கு விவாகசோபன முயற்சிகள், களத்திரநன்மை, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 29, 30, மேமாதம் 5 சுபதினங்களாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

நிதானமானபலன், குடும்பத்தில் சுபீட்சம், தன்னம்பிக்கை, திடமும், உறுதியும், சுபகரும முயற்சிகள், ஞாபகசக்தியும் ஊக்கமும், பூமிவிவகாரவெற்றி, அசுப செய்திகள் கேட்டல், மனைவி, மாதா, பிதா, சகோதரர்கள் உடல்நலக்குறைவால் கஷ்டம், மூத்த சகோதரருக்கு நன்மை, வியாபாரத்தில் வெற்றி, பணவரவு, உத்தியோக மதிப்பு. இடமாற்றப் பேச்சு, பெரியோர் ஆதரவு இவர்களுக்கு மே மாதம் 1, 2, 5 சுபதினங்களாகும்.

★

## கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய).

நல்லாரோக்கியம், புதிய தொழில் மாற்றம், உத்தியோக உயர்வு, வர்த்தக லாபம், தொழில் விருத்தி, பண வரவு, புகழ், நண்பரால் – பெரியோரால் ஆதரவு, வழக்குகளில் வெற்றி, எதிரிகள் இடர் குறையும், பணச்செலவு, பெண்களுக்கு கருச்சிதைவு போன்ற கஷ்டங்களும் மாணவருக்கு வித்தைச்சிறப்பு, கமத்தொழிலாளருக்கு ஆதாயமும் தொழில் விருத்தியும் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 29, 30, மே மாதம் 3, 4 சுபதினங்களாகும்.

★

## மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

வருமானக்குறைவு, உடல் நலக்குறைவு, நண்பர் ஒத்தாசை, விபாபாரத்தில் வருவாய், புதியனசிக்கல், கடன் தாமதம், உத்தியோகத்தில் மேலோரால் சிரமம், வெறுப்பு, கல்வித்தடை, பெண்களுக்கு களத்திரநன்மை, குடும்பகாரியம், பொருள் செலவு, நிம்மதியினம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 1, 2, 5 சுபதினங்களாகும்.

---


## முட்டை அடைவைக்கும் விபரங்கள்

ஆசக் குறைந்தது 10 முட்டைகள் தலா 15 சத விகிதப்படி பொரித்துக்கொடுக்கப்படும். முதல் 100 முட்டைகள் தலா 15 சதவிகிதப்படியும், இரண்டாம் 100 முட்டைகள் தலா 14 சத விகிதப்படியும் மூன்றும் 100 முட்டைகளும் அதற்கு மேலும் தலா 13 சதம் விகிதப்படியும் பொரித்துக் கொடுக்கப்படும்.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

## கோழிக் குஞ்சுகள்

உத்தரவாதம் பெற்ற நம்பிக்கையான "வைட் லெக்கோன்" கோழிக்குஞ்சுகள்— ஒவ்வொன்றும் 60 சதம்.

ஏனைய ஜாதிக் குஞ்சுகள் ஒவ்வொன்றும் 70 சதம்.

அவயகூடத்தில் உள்ளூர் விற்பனைக்கு சிறிதளவு குஞ்சுகள் தான் விற்பனைக்கு இருப்பதால் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள். 50% முற்பணம் செலுத்தப்படும் ஆடர்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

## தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்

சுலபமாக பஸ்ஸிலேயே வந்து சேரலாம். - நான்காவது மைல் கட்டைக்கருகாமையிலும் ஆனைக்கோட்டை உப-தபாற் கந்தோருக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

'ஒரு நாள்' — குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் 'ஏஜண்டு'கள் தேவை.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

இலங்கையில் ஒரு திறமானதும் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரியதுமான அடைகாக்கும் யந்திரக்கருவி (16000முட்டைகள் அடை வைக்கக் கூடிய சக்தியுடையது) உதவியுடன் பொரித்த சிறந்த ரகக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தேசிய அவயகூடமும்
கோழிச் சேவையும்,
மானிப்பாய் வீதி,
கூளாவடி, ஆனைக்கோட்டை.


---

# நிலக்கரி சுரங்கங்களில் பாதுகாப்பு

## கரியமிலவாயு உற்பத்தியை உணர்த்த புதுசாதனம்

சுரங்கங்களில் வேலை செய்வது மிக அபாயகரமானதாகும். எந்தச் சமயத்தில் என்ன ஆபத்து நேரிடும் என்பதை யாரும் சொல்ல முடியாது. ஆனுல் இந்த ஆபத்துக்களை எல்லாம் தவிர்ப்பதற்கான வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. மேற்கு ஜெர்மனி இத்துறையில் அரியசேவை செய்துள்ளது. உடலுக்கு தீங்கிழைக்கும் கரியமில வாயுவின் உற்பத்தியை முன்னதாகவே உணர்த்தும் ஒரு சாதனம் மேற்கு ஜெர்மன் நிபுணர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

சுரங்கங்களில் வேலை செய்யும் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்க்கக்கூடிய வழிகள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இக்காலத்திலும் சுரங்கத் தொழிலாளர்கள் பேராபத்தை எதிர்நோக்கியே வேலை செய்ய வேண்டியிருக்கிறது. கண் மூடித்திறக்குமுன் ஏற்படக்கூடிய விபத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு தக்க சான்று சமீபத்தில் ஒரே வாரத்தில் ஏற்பட்ட இரு பெரும் சுரங்க விபத்துகளாகும்.

ஸார்லாந்திலும், ஹெஸ்ஸியிலும் ஏற்பட்ட இரு சுரங்க விபத்துகளில் சுமார் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மாண்டிருக்கின்றனர். எதிர் காலத்தில் ஒருசிறுஅளவு கரியமிலவாயு ஏற்படும் போதே எச்சரிக்கை செய்ய முடிந்தால் சுரங்கத்தில் தீ விபத்து ஏற்படுமுன் அதில் வேலை செய்வோர்கள் தப்பிச் செல்ல வழி செய்ய முடியுமா என்பதே இப்போதுள்ள கேள்வி. முடியும் என்றே இதற்குப் பதில் கிடைத்துள்ளது.

சுரங்கங்களில் வேலை செய்பவர்களின் உயிர்களைக் காக்க தக்க சமயத்தில் எச்சரிக்கை செய்யும் இரு சாதனங்கள் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளில் சுரங்கத் தொழில் நடத்திய போட்டியின் விளைவாகவே இந்த சாதனங்கள் முக்கியத்துவத்தை அடைந்துள்ளன. லக்ஸம்பர்க்கிலுள்ள நிலக்கரி இரும்புச் சுரங்க ஸ்தாபன உயர்தர அதிகாரி இவ்விரு சாதனங்களைக் கண்டு பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கியிருக்கிருர்.

சுரங்கங்களில் கரியமில வாயு உற்பத்தியாலல் எளிதில் தீப் பிடித்துக் கொள்ள ஏதுவாகும். இக் கரியமிலவாயு உற்பத்தியாவதை உணர்த்தும் சாதனம் ஜெர்மன் பௌதிக நிபுணர் டாக்டர் லப்ட் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆபத்தை ஏற்படுத்தும் இதர வாயுக்கள் ஏற்படும் பட்சத்திலும் இந்த சாதனத்திலுள்ள சிவப்பு விளக்கு எரியும் இதைக் கண்டுபிடித்ததற்காக டாக்டர் லப்டுக்கு 1,40,000,00 ஜெர்மன் மார்க்குகள் பரிசாக வழங்கப்பட்டது. இந்தச் சாதனம் ஹனோவரில் நடைபெறும் ஜெர்மன் தொழில் வர்த்தகக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும்.

நிலக்கரிச் சுரங்கங்களிலே உற்பத்தியாகும் மெதானே என்ற வாயுவின் உற்பத்தியையும் இந்த சாதனம் உணர்த்தக் கூடியதாகும் சிறு மாறுதலைச் செய்தால் அந்த வாயுவை அளந்து கணக்கிடவும் முடியுமாம்.

சுரங்க ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒருகூட்டத்தில் இந்தச் சாதனத்தை டாக்டர் லப்ட் பரீட்சித்துக் காட்டினர். சிகரெட் பிடித்துவிட்டு புகையை இந்தச் சாதனத்தின் புனல் போன்ற வாயில் அவர் ஊதினர். இப் புகையிலிருந்த மிக மிகச் சிறிய அளவிலுள்ள கரியமில வாயுவைக்கூட இச் சாதனம் உணர்த்திவிட்டது.

கரியமில வாயு ஒரு சிறிதளவு ஆனல் கூட மனித சுவாசப்பையில் உட்புக நேர்ந்தால் உயிராபத்து ஏற்படக்கூடும். ஆகவே இந்தச் சாதனம் உண்மையில் ஒரு வரப்பிரசாதமாகும். பத்து வருடங்களுக்கு இம்மாதிரிச் சாதனத்தைக் கண்டுபிடித்திருந்தால் கூட இவ்வளவு சிறிய அளவில் அமைத்திருக்க முடியாது. இப்போதுள்ள சாதனமும்100 ருத்தல் எடையுள்ளது. இதற்குக் காரணம் சுரங்கங்களில் வெடி விபத்துக்கள் ஏற்பட்டாலும் அவைகளால் இந்தச் சாதனத்திற்கு எவ்வித பழுதும் ஏற்படாது.

கடின நிலக்கரியுள்ள சுரங்கங்களில் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடும். ஹட்ரோகார்பன் வாயுவில் ஒரு ரகமான மெதானே வாயு, வானவெளியிலுள்ள காற்றுடன் கலந்தால் வெடி விபத்துக்கள் ஏற்படலாம். இந்த வாயுவைப் பற்றி உணர்த்தும் சாதனம் ஒன்றும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அரிய சாதனங்களால் நிலக்கரிச்சுரங்கங்களில் ஏற்படக்கூடிய விபத்துகள் இனித் தவிர்க்கப்படலாம்.

# "கடமை கடமை"

—கச்சாயில் இரத்தினம்—

**மீக்க வெற்றியுடன் அந்த சத்திர சிகிச்சை முடிந்தது. குழந்தை குவா! குவா! என்று அழுதது. குழந்தையின் தாய் மட்டும்.....? மோசமான நிலை. டாக்டருக்கு நிம்மதியில்லை. கடமை.... கடமை.... அதில் டாக்டருக்கு வெற்றிதான். குழந்தையின் தாய் உயிர் தப்பினுள். ஆனுல் அதே சமயத்தில் டாக்டரின் தாய்....?**

## சிறுகதை

டாக்டர் சுந்தரம் அந்த ஆஸ்பத்திரிக்குக் கடமையாற்ற வந்து சுமார் ஆறுமாதங்களாகி விட்டன. ஆனுல் அவருடைய மனதை அங்குள்ள மற்ற டாக்டர்களுக்கோ அல்லது நேர்ஸ்மார்களுக்கோ அறிந்து கொள்ளமுடியவில்லை. அவர் மற்றவர்களுடைய பார்வைக்கு ஒரு அதிசய மனிதராகவே தோன்றினர்.

டாக்டர் சுந்தரம் அங்கு கடமையாற்றத் தொடங்கிய அந்த ஆறுமாதங்களில் ஒரு நாளேனும் ஆஸ்பத்திரிக்கு வராமல் பங்களாவில் இருக்கவில்லை. எந்த நேரம் பார்த்தாலும் ஆஸ்பத்திரியில் அவரைக் காணலாம். ஓயாமல் அவர் 'வார்ட்டைச்' சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டே இருப்பார். அதனுல் அவரின் கீழ் வேலை பார்க்கும் டாக்டர்களுக்கும், அப்போதிக்கரிமார்களும் மற்றும் ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் பெருத்த சங்கடமாய் இருந்தது. அவரை அவர்கள் ஒரு 'புதுமை மனிதர்' என்று கூறத் தொடங்கினர்கள்.

டாக்டர் சுந்தரத்துக்குவயது சுமார் முப்பது இருக்கும். நல்ல வசீகரமான தோற்றம். விசாலமான நெற்றி. நெற்றியில் சில சுருக்குகள் நெளிந்து நெளிந்து உழுதுவிட்ட வயலைப் போலக் காணப்பட்டன. முகத்தில் எந்த நேரமும் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருக்கும். எப்பொழுதும் அவருடைய அகன்று விரிந்த நீலவிழிகள் எதையோ சிந்தித்துக் கொண்டே இருக்கிறர் என்பதை எடுத்துக்காட்டும்.

டாக்டர் சுந்தரத்துக்கு அழகான மனைவி இருந்தாள். நல்ல அழகான குழந்தை ஒன்றும் இருந்தது. ஆனுல் அவர் என்றைக்கும் தமது மனைவியுடன் கூடி உலாத்தவோ அல்லது கடற்கரைக்கோ போவதில்லை. அவர் மனைவியை வெளியிற் பார்ப்பதே அபூர்வம். எந்த நேரமும் பங்களாவில் தான் செய்யக்கூடிய வேலைகளைச் செய்துகொண்டே இருப்பாள். குழந்தையைக் கவனிப்பாள். தனது கணவனை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போகவோ தெருவில் உலாத்தவோ அவள் போவதில்லை. டாக்டர் அவளை அப்படி அழைத்துக்கொண்டு போவதும் இல்லை.

இவை அனைத்தும் அங்குள்ளவர்களுக்கு மனத்தில் பெருத்த வியப்பை உண்டு பண்ணிவிட்டது. அவர்கள் எதைச் செய்யமுடியும். எதையும் கண்டுகாணுமற் பேசவும் மனப் பயம். எப்படியோ அவர் ஒரு பெரிய டாக்டர். அவரிடத்தில் காணப்படும் குறை நிறைகளை அவர் அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள் பேசக் கூசுவது இயல்பு தானே. ஒவ்வொருவரும் தங்கள் மனத்தில் பெரிய டாக்டரைப் பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு நல்லமனிதரைப் போலத் தங்கள் வேலைகளைச் செய்தார்கள்.

டாக்டர் சுந்தரம் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தபிறகு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. பல பெரும் பிரிவுகளிலிருந்தும் நோயாளிகள் தினமும் அங்கு வந்து குவிந்து கொண்டே இருந்தார்கள். அதனுல் அந்த ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் அத்தனை பேருக்கும் மூச்சு விடக் கூட அவகாசமில்லை. ஓயாமல் ஓடியாடித் தங்கள் தங்கள் கடமைகளைச் சுறுசுறுப்போடு செய்யவேண்டி இருந்தது.

டாக்டர் சுந்தரத்தின் பொறுமையான குணமும், நிறைந்த அன்பும் பொதுமக்களின் மனசைக் கவர்ந்துவிட்டது. டாக்டர் சுந்தரத்தை அவர்கள் வாயார வாழ்த்தினர்கள். வானுயரப் புகழ்ந்தார்கள். அவர் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தநாள் தொடக்கம் அங்கே வருகிறநோயாளிகளுக்கு நல்ல காலம் பிறந்தது. அவர் அங்கே வருகிற ஒவ்வொரு நோயாளியையும் தனது சொந்தமானவர்களைப் பரிசோதனை செய்து பார்ப்பது போல எம்மட்டோஅக்கறையாய்ப்பார்த்து வந்தார். அதனுல் ஊரவர்கள் "ஒரு புண்ணியவான் டாக்குத்தர் இப்போது வந்து இருக்கிருர். அவர் வந்த பிறகுதான் எங்களின்ரை ஊரிலே வருத்தம் குறைஞ்சது. அவரின்ரை பெண்சாதி பிள்ளைகளுக்கு கடவுள் ஒரு குறையும் விடமாட்டார்" என்று அவரைப் புகழ்ந்து பேசினர்கள்.

அன்று டாக்டர் சுந்தரம் பகல் ஒரு மணி வரைக்கும் நோயாளர்களைப் பரிசோதனை செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து வகைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டுச் சாப்பிட பங்களாவுக்குப் போனர்.

பங்களாவுக்கு வந்தவர் தமது பகற் சாப்பாட்டை முடித்து விட்டுச் சிறிதுநேரம் சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டு பேப்பர் வாசித்தார். அவருக்குப் பக்கத்தில் அவர் அன்பு மனைவி வந்து இருந்து அவர்பார்த்துவிட்டுக்கொடுத்த பேப்பரை வாங்கி வாசித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அங்கே வந்த தந்திக்காரன் தந்தி ஒன்றை டாக்டரிடம் கொடுத்து அவர் கையெழுத்தை வாங்கிக் கொண்டு போனுன்.

டாக்டர் தந்தியைப் பிரித்து வாசித்தார். தந்தியில் "தாயாருக்கு மிகவும் கடுமையான வருத்தம். உடனே வரவும்" என்று இருந்தது. அதை வாசித்ததும் அவர் முகம் சிறிது வாட்டமுற்று விட்டது. எப்படியோ! பெற்ற தாய்க்கு வருத்தம் கடுமைஎன்ருல்மனம் கலங்காமல் இருக்க முடியுமா?

கணவனின் முகம் வாடிவிட்டதைக் கண்ட அவர் மனைவி அகல்யா அவரைப் பார்த்து "இஞ்சாருங்கோ! அது என்ன தந்தி ஆருக்குச் சுகவீனம்?" என்று மிக்க அக்கறையோடு கேட்டாள்.

"அம்மாவுக்கு வருத்தம் கடுமையாம். எங்களை உடனே வரட்டுமாம்" என்ருர் டாக்டர்.

"என்ன! மாமிக்கு வருத்தம் கடுமையோ? அப்ப வெளிக்கிடுங்கோ போவம்" என்று பரபரப்போடு கூறினுள் அகல்யா.

"அகல்யா நாங்கள் நினைத்த உடனே போகக் கூடிய வேலை அல்ல இந்தவேலை. உம் சரி எதற்கும் நான் ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போய் பார்த்து விட்டு வருகிறேன். நீ வெளிக்கிடு" என்று கூறிவிட்டுத் தமது 'ஸ்டெலஸ் கோப்பை' யும் கையில் எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவர்எதிரில்நர்ஸ்கமலா மூச்சு வாங்க! வாங்க!! ஓடிவந்தாள். அவள் ஓட்டமாய் ஓடிவருவதைக் கண்ட டாக்டர் சுத்தரம் கமலாவைப் பார்த்து "மிஸ் கமலா, என்ன சங்கதி? யாருக்காவது வருத்தம் கடுமையா?" என்று மிக்க கரிசனையோடு கேட்டார்.

"ஓம் டாக்டர் ஒரு பெண்ணுக்கு மிகவும் ஆபத்து. அவளுக்குக் குழந்தை பிரசவிக்க வேண்டிய நேரம் தவறி விட்டது. தயவு செய்து நீங்கள் அவளைப் பரிசோதித்து பார்க்க வேண்டும்" என்ருள் நர்ஸ் கமலா.

நர்ஸ் கமலா கூறியவற்றைக் கேட்ட டாக்டர் சுந்தரத்தின் சிந்தையில் உதித்த எண்ணம் எல்லாம் எங்கோ மாயமாய் மறைந்து விட்டன. அவர் நேரே பிரசவ வாட்டிற்குப் போனர். அங்கே இரண்டாவது டாக்டர் விசுவநாதனும் சில நர்ஸ்மார்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் டாக்டர் சுந்தரத்தைக் கண்டதும் அந்தக் 'கேஸ்' மிகவும் ஆபத்தான 'கேஸ்' என்றும் அந்தப் பெண்ணைத் தப்ப வைக்க வேண்டுமானுல் உடனே சத்திர சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் கூறினர்கள்.

டாக்டர் சுந்தரம் உடனே அந்தப் பெண்ணைச் சத்திர சிகிச்சை அளிக்கும் அறைக்குக் கொண்டுபோகுமாறு கூறிவிட்டு, அவர் சத்திர சிகிச்சை செய்ய ஆயத்தமானர்.

மிக்க கவனத்தோடு டாக்டர் சுந்தரம் சத்திரசிகிச்சையை அந்தப்பெண்ணுக்கு வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

குழந்தை "குவா குவா" என்று அழுதது. ஆனுல் இனித் தாய்க்குச் சுய அறிவு வரும் வரைக்கும், அவளுக்குப் பக்கத்திலிருந்து முக்கியமான சில சிகிச்சைகளைச் செய்ய வேண்டும். அதனுல் அவளைக் "கவனித்துக் கொள்ளுங்கள்" என்று டாக்டர் விசுவநாதனிடம் கூறி விட்டுச் சென்ற டாக்டர் சுந்தரத்தின் மனசு நிம்மதி அடையவில்லை. அந்தப் பெண்ணுடைய உயிர் அவர் கையில் தான் தங்கி இருப்பது போன்ற மனப்பிரேமை ஏற்பட்டு அவரை அங்காலே செல்ல விடாது தடுத்து விட்டது.

மீண்டும் அவர் திரும்பி வந்து அவள் உடம்பிலுள்ள உஷ்ண நிலையைப் பரிசோதித்துப் பார்த்தார். உஷ்ணநிலை மிகமந்தமாகஇருந்தது. உடனே அவர் அங்கு நின்ற நர்ஸ்மாரிடம் அவள் உடம்பில் உஷ்ணம் குறையாமல் இருக்கச் சுடுதண்ணீர் 'டியூப்புக்களை' அவள் உடம்புக்கு அணையாக வைக்கும்படி கூறிவிட்டு, அவரும் அந்த இடத்திலேயே இருந்து கொண்டார்.

இரவு சுமார் பத்துமணி அளவில் அந்தப் பெண்ணுக்கு சுய அறிவு வந்தது. அதன் பிறகு அவளுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகளை எல்லாம் அங்குள்ள நர்ஸ்மாரிடம் கூறிவிட்டு அவர் தனது பங்களாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அகல்யா சாயந்திரம் மூன்று மணியிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் தனது கணவரின் வரவை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாந்து போனுள். அவளுக்கு மனசு அலுத்து விட்டது. அவள் அதுவரைக்கும் உடுத்து இருந்த உடையைப் போய் உள்ளறையில்மாற்றிக்கொண்டு வெளி விருந்தைக்கு வந்து வழியைப் பார்த்துக் கொண்டு நின்ருள்.

சுவர்க் கடிகாரத்தில் மணி பத்து அடித்து நிமிஷங்களும் மூன்ருகி விட்டன. அகல்யாவுக்குத் தனது கணவரின் போக்கு ஒன்றும் விளங்காத புதிராகவே இருந்தது. "தாயாருக்கு வருத்தங் கடுமை; உடனே வாருங்கள்" என்று தந்தி வந்துங்கூட அவர் ஆஸ்பத்திரியை விட்டு வரவில்லையே! என்பதை எண்ண அவள் மனம் துணுக்குற்றது. பெற்ற தாயாரைக் காட்டிலும் அந்த உத்தியோகம் ஒரு பெரிதா? என்று அவள் மனத்தில் எண்ணிக்கொண்டாள்.

அப்பொழுது அங்கு வந்த டாக்டர் சுந்தரம் "அகல்யா நான் உன்னை நெடு நேரம் காத்துக் கொண்டு இருக்க வைத்துவிட்டேன். என்ன செய்கிறது. ஆஸ்பத்திரியில் மிக ஆபத்தான கேஸ் ஒன்று இந்த நேரம் பார்த்துத்தான் வந்து சேர்ந்தது. அதை நான் கவனிக்காது போனுல் நான் என் கடமையைச் சரிவரச் செய்யாதவனுவேன். நான் இல்லாவிட்டால் மற்றவர்களால் எதுவும் செய்ய முடியாது. இவை யாவும் நமக்குக் கடவுளின் சோதனை. இனி நாங்கள் இந்த அவசரகாலச் சட்டத்தின்படி வெளியே செல்ல முடியாது. இன்னும் என்ன! விடிய ஏழு மணித்தியாலங்கள் தானே இருக்கிறது. விடியட்டும் போவோம்" என்று கூறினர்.

"இது நல்ல கடமை தான். உங்கள் அம்மாவுக்கு வருத்தம் கடுமை என்று தந்திவந்து இருக்கிற இந்த நேரத்தில் இதை எல்லாம் பார்க்கலாமா? நாளைக்கு மாமிக்கு ஒன்ருனுல் உங்களை ஊரவர்கள் என்ன எல்லாமோ! சொல்லிக் குறை பாடுவார்கள்," என்ருள் அகல்யா.

"அகல்யா, நாம் ஊராருக்குப் பயந்து நமது கடமையைத் தவறக்கூடாது. ஊராருக்கு என்ன! அவர்கள் எலும்பு இல்லாத நாவால் எதையும் பேசுவார்கள். அதை எல்லாம் நாம் காதிற்போட்டுக் கொள்வது தான் பிசகு. எவன் ஒருவன் கடவுளுக்குப் பயந்து தனது பணியைக் கண்ணியமாகச் செய்கிருனே! அவனே கடமையைச் சரிவரச் செய்த கனவானுவான்" என்ருர் டாக்டர்.

எடுத்ததுக்கெல்லாம் "கடமை, கடமை," என்று கூறிக் கொள்ளும் அவள், கணவனுடைய பிடிவாதகுணத்தைக் கண்டதும் "சரி, இப்ப நீங்கள் போய் உங்கள் உடையை மாற்றிக் கொண்டு வாருங்கோ! சாப்பிட" என்ருள்.

மறு நாள் அதிகாலையில் டாக்டர் தனது மனைவி குழந்தையுடன் தனது பெற்ருர் வீட்டுக்குப் போனர்.

அங்கே அவர் கண்ட பரிதாபகரமான காட்சி அவரைக் கதிகலங்க வைத்தது. அவர் தாயார் நல்லமணி அன்று இரவே இறந்து போய் விட்டாள்.

டாக்டரைக் கண்டதும் அங்கு கூடிநின்ற சுற்றத்தவர்கள் அவரைச்சுற்றி வளைந்து கொண்டு "நீங்கள் நேற்றுத் தந்தி கிடைத்தவுடன் வந்து இருந்தால் உங்கள் தாயாரின் கண்ணில் விழிக்க இருந்தது. அதை நீங்கள் தவறவிட்டதால், உங்கள் தாயார் முகத்தில் விழிக்க உங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்ருர்கள்.

டாக்டர் அவர்களிடம் எதுவும் பேசவில்லை. அவர் அன்று ஆஸ்பத்திரியில் இரண்டு ஜீவன்களை மீட்பதற்காக எவ்வளவோ பிரயாசித்தார். ஆனுல் அந்த நேரத்தில் இங்கே அவர் தாயார் நல்லமணியின் உயிர் பிரிந்து விட்டது. என்ன நிகழ்ந்தாலும் மனிதன் தனது கடமையைச் செய்யத் தவறக் கூடாது என்பது அவர் இலட்சியம் அல்லவா?. அதனுல் அவர் தனது தயாருக்கு அதற்குப்பிறகு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய ஆயத்தமானர். அவர் கண்களில் கண்ணீர் சுரந்து வழிந்தது.

(யாவும் கற்பனை)

# மூச்சுக்காற்ருல் தட்டெழுத்து அடிக்கும் அதிசயம்

**1961** ஆம் ஆண்டில் ஒரு நாள் பாரிஸ் நகரத்திலுள் ஓர் வைத்திய சாலையில் முகப்பில் பெரியதோர் மோட்டார் கார் வந்து நின்றது. காரை ஓட்டிவந்த ஸ்ரீ ரெஜிஞல்டு மேலிங் கீழே இறங்கினர். பிறகு, மற்றவர்கள் துணைகொண்டு படுத்தபடுக்கையாகக் கிடக்கும் ஓர் நோயாளியையும் அவருக்கு மூச்சூட்டும் கருவிகள் இரண்டையும் மெதுவாகக் கீழே இறக்கினர். மேலிங்கும் அவருடைய நண்பர் டெரிக் கிளார்க்லும் அதிசயக் கருவியொன்றைத் தயாரித்தார்கள். இளம்பிள்ளைவாதம் அல்லது பாரிசவாயு போன்ற நோயினுல் உறுப்புக்களை அசைக்கும் ஆற்றலை இழந்து படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் நோயாளிக்கு உதவும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட அந்தக்கருவி, இயக்குநர் விருப்பப்படி மணியை அடித்து படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் நோயாளிக்கு அடித்து ஒலிக்கும் பொத்தானைத்தட்டி மின்விளக்கை ஏற்றும் ரேடியோ அல்லது டெலிவிஷன் செட்டை இயக்கும் டெலிபோனில் பேசத் துணை செய்யும், (டைப்ரைட்டரிலுள்ள) தட்டெழுத்துக்களைத் தட்டி கடிதம் எழுதும்.

## நோயாளருக்குத்தொண்டு

லண்டனுக்கு வடமேற்கே நாற்பது மைல் தொலைவில் உள்ள ஸ்டோற் மந்தவெளி என்ற ஊரில் ஒரு வைத்திய சாலை இருக்கிறது. அங்கு படுத்த படுக்கையில் கிடக்கும் நோயாளிக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட நண்பர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர் மேலிங். சங்கஉறுப்பினர்கள் வைத்தியசாலைக்குச் சென்று இளம்பிள்ளைவாதம், பாரிசவாயு முதலிய நோய்களால் அவதியுறுவோருக்கு நூல்களைப் படித்துக்காட்டியும் கடிதங்களை எழுதித்தந்தும் தொண்டாற்றுகிருர்கள்.

ரெஜி[illegible] மேலிங்கும் அவருடைய [illegible]பர் கிளாக்லையும் ஒருநாள் ஸ்டோக் மந்தவெளி வைத்தியசாலைக்குச் சென்றபோது உதட்டுக்கருகில் ஓர் ஊதலைக்கட்டித் தொங்கப்பட்டிருந்த பக்கவாத

(4ம் பக்கம் பார்க்க)

## மூச்சுக்காற்றால் தட்டெழுத்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளியைக் கண்டனர். அந்த நோயாளியால் இப்படி அப்படித் திரும்ப முடியாது. எவரையாவது உதவிக்கு அழைக்க வேண்டுமென்றால் ஊதலை ஒலிப்பார்.

### 'மானோ மீட்டர்'

ஊதல் சிறிது விலகிவிட்டால் அந்த நோயாளி எவரையும் அழைக்க முடியாமல் தவிப்பாரே என்று எண்ணினார் மேலிங். அவர் ஒரு ரசாயன நிபுணர். கிளார்கஸன் மின்னணுப் பொறியில் வல்லுனர். ஊதலை விடச் சிறந்ததோர் கருவியை அந்த நோயாளிக்கு உதவவேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். புதியதொரு கருவியை அமைப்பதுபற்றி இருவரும் சிந்தித்தார்கள். சோதனையில் ஈடுபட்டார்கள்.

வாயினால் ஊதும்போதும் உறிஞ்சும்போதும் மூச்சுவிடும் போதும் காற்றழுத்தம் எப்படியிருக்கிற தென்பதை "மானோ மீட்டரின்" உதவியால் அளந்து கொண்டார்கள். (மானோ மீட்டரிலுள்ள பாதரசம் காற்றழுத்தத்திற்கு ஏற்றபடி ஏறி இறங்கும்.) பிறகு பாதரஸத்தில் ஏற்ற இறக்கத்தால் இயங்கக்கூடிய மின்சார ஸ்விட்சை ஒன்றை அமைப்பதுபற்றிச் சிந்தித்தார்கள். பாதரஸம் வெவ்வேறு உயரத்தில் நிற்கும் போது வெவ்வேறு ஸ்விட்சுகளைத் தட்டிவிடக்கூடியமுறையில் ஓர் பொறியைக் கட்டி முடித்தார்கள். அத்துடன் மின்சார மணி, வெப்பமூட்டும் கருவி, ரேடியோ, டெலிவிஷன் முதலிய பல கருவிகளை இணைத்தார்கள். "குற்றேவல்" செய்யும் அத்தப் பொறிக்கு "போஸம்" என்ற பெயர் சூட்டினார்கள். (போஸம் என்பது லத்தீன் சொல். 'என்னால் முடியும்' என்பது அதற்குப் பொருள்.)

### போன் தொடர்பு

ஊனமுற்றிருப்பவர் உள்ளம் விழிப்பாகவும் துடிப்பாகவும் செயலாற்றும். ஆகையால் அதற்கேற்றபடி தாங்கள் கண்டுபிடித்த பொறியில் அபிவிருத்திகளைச் செய்வது அவசியம் என்பதை மேலிங்கும், கிளார்க்ஸனும் அதிவிரைவில் உணர்ந்தனர். படுக்கையில் கிடக்கும் நோயாளிகள் டெலிபோன்மூலம் உறவினருடனும் நண்பர்களுடனும் உரையாட விரும்புவார்கள். ஆகையால் முதலில் அந்த வசதிக்கு ஆவன செய்வதுபற்றிச் சிந்தித்தது. வெற்றியும் பெற்றார்கள். காற்றை உறிஞ்ச உறிஞ்ச பாதரஸ மட்டம் குறையும் ஆகையால், ஒரு குறிப்பிட்ட நிலைக்கு பாதரஸம் இறங்கும் போது ஸ்விச்போர்டு ஆபரேட்டருக்கு எச்சரிக்கை ஒலி தரும் முறையில் சூச்சியம் அமைக்கப்பட்டிருக்கிறது. நோயாளி தன்னுடைய வாய்க்கு அருகில் வைக்கப்பட்டுள்ளமிகவும் லேசான மைக்ரோ போன் மூலம் ஸ்வச்போர்டு ஆபரேட்டருன் பேசமுடியும். அந்த மைக்ரோ போனை சின்னஞ் சிறு ஒலிபெருக்கியுடன் இணைத்திருப்பதால் டெலிபோன் தொடர்பு கிடைக்கும்போது நோயாளி மிகவும் மெல்லிய குரலில்கூட மறுமுனையிலிருப்பவருடன் உரையாட முடியும்.

ஸ்ரீ. மேலிங்கும் அவருடைய நண்பரும் ஆற்றியுள்ள சாதனை வியக்கத்தக்கது. அவர்கள், (கற்றை) ஊதும் சமிக்ஞை முறை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த முறையில் ஒவ்வோர் [illegible]த்துக்கும் தனித்தனி [illegible]ஞையுண்டு. நோயாளி, தான் எழுத விரும்பும் செய்தியை எழுத்துக்களாக்கிக் கொண்டு அவற்றை சமிக்ஞை மூலம் அறிவித்தால் டைப்ரைட்டரில் செய்தி பதிவாகிவிடும். உயர்த்தியும் தாழ்த்தியும் ஊதும்போது 'கன்ட்ரோல் பெட்டி' அந்த சமிக்ஞையை ஏற்றுக் கொண்டு டைப்ரைட்டரிலுள்ள எழுத்துக்களை அழுத்துகிறது. இந்த சமிக்ஞை முறையை நோயாளிகள் எளிதில் பயின்று கொள்ள முடியும்.

# மறதியை மடக்கும் மந்திரம்!

— க. சதானந்தன் —

**மனோ தத்துவ ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் சில வியப்புக்குரிய விஷயங்களைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். எம்முடைய நினைவின் சக்தி மிகவும் பிரமாண்டமானதாம். ஆனால் எம்மில் அநேகர் நூற்றுக்கு ஒரு வீதமே அவற்றை உபயோகிக்கிறோம். சிலர் பத்துவீதம் வரை பாவிக்கக்கூடும். இதற்கு மிஞ்சிப் பாவிப்போர் தொகை நூற்றுக்கு ஒரு வீதமுமில்லை. ஆனால் நாமெல்லாரும் அந்த அளவுக்கு எமது ஞாபகசக்தியை வளர்க்கலாம்.**

"என்ன, புத்தகத்துக்கு முன் தவம் செய்கிறாயா? பாடத்தை உரக்க வாசித்து மனப்பாடம் செய்!" என்று கடிந்தார் என் தாயார்.

தினமும் இரவு மணி ஆறுக்குப் பின் இது நடப்பது வழக்கம். நான் கல்லூரியில் படித்த காலத்தில் பாடப்புத்தகங்களுக்கு முன் உட்கார்ந்து கதைப் புத்தகங்கள் படிக்க எத்தனிக்கும் எனக்கு உரக்க வாசிக்கமுடிவதில்லை. எனினும் சரித்திரம், பூமிசாஸ்திரம் முதலிய பாடங்களில் திகதிகளையும் தொகைகளையும் ஊர்களையும் பேர்களையும் ஞாபகம் வைத்திருக்க முடிவதில்லை. தாயாரோ அனுபவத்தில் மனனம் செய்து கற்றவர் போலும், அதுபோல் நானும் கல்வி கற்கவேண்டும் என எண்ணினார்கள்.

பாடசாலையில் ஆசிரியர்கள் கூட அதேபோல் எண்ணியது எனக்குஇப்பொழுது வியப்பை உண்டாக்குகிறது. ஒவ்வொரு நாளும் ஏதாவது மனனம் செய்ய வேண்டியிருக்கும். இப்படிச் செய்தால் மேல்வகுப்புக்களில் கல்வி பயில்வது இலகுவாகவிருக்கும் என்று கூறிவந்தனர். மூளை பாரம் தாங்க மறுத்தால், மோட்டார் மெக்கானிக்குகள் போல் ஆசிரியர் காரை 'டைட்' செய்து விடுவார்! நீங்களும் என்னைப் போலவே கஷ்டப்பட்டிருப்பீர்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

நாம் எல்லாரும் என்றென்றும் ஞாபகத்தில் எல்லாவற்றையும் வைத்திருக்க ஏங்குகிறோம். எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்க முடியாதகாரணத்தால் 'டயறி' வைத்திருப்போர் அநேகர். உத்தியோகஸ்தர் டயறி வைத்திருக்கலாம். ஆனால் மாணவர்கள் பரீட்சையறைக்கு டயறி கொண்டுசெல்ல அனுமதிக்குமளவுக்கு நமது நாகரிகம் முன்னேறவில்லையே! ஆனால் கல்வியேணியில் ஏற ஏற ஞாபகப் பிரச்சினையும் கூடவே ஏறிக்கொண்டுபோகும். இந்த மாணவர்களின் அனுகூலத்திற்காக ஞாபகம் பற்றிய சில உண்மைகளை விஞ்ஞான ரீதியாக ஆராய்வோம்.

### ஞாபக சக்தி

மூளையின் 'பராயட்டல்' பாகம் எனப்படும் கோணங்களில் உள்ள உறுப்புகளில் நினைவு சேகரிக்கப்படும். இவை ஏறக்குறைய உச்சந்தலையின் இரு பக்கங்களிலும், காதுகளுக்கு சற்று பின்பும் மேலும் உள்ள மேடுகளுக்கு உட்புறமாக அமைந்துள்ளன. நாம் கல்வியினாலும் அனுபவத்தினாலும் அறிந்து கொள்வதெல்லாம் இந்த நினைவு உறுப்புகளில் சேகரித்து வைக்கப்படுகின்றன. எமது தேவைக்கு அவ்விஷயங்களை அப்புதையலிலிருந்து வெளிக்குக் கொண்டு வரும் முயற்சிக்கே ஞாபக சக்தி என்று பெயர். மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் சில வியப்புக்குரிய விஷயங்களைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். எம் நினைவின் பலம் மிகவும் பிரமாண்டமானதாம். ஆனால் எங்களில் அநேகர் நூற்றுக்கு ஒரு விகிதமே அவற்றை உபயோகிக்கிறோம்.

சிலர் பத்து விகிதம் வரை பாவிக்கக்கூடும். இதற்குமிஞ்சிப் பாவிப்போர் நூற்றுக்கு ஒரு விகிதமும் இல்லை. ஆனால் நாம் எல்லாரும் அந்த முறையில் எமது ஞாபகசக்தியை வளர்க்கலாம்.

இது எப்படி? சமீபத்தில் நடந்த ஒரு ஆராய்ச்சியில் மனனம் செய்து பயிற்சி பெற்ற சிலரிடமும், பயிற்சி இல்லாத சிலரிடமும் ஒரு கட்டுரையைக் கொடுத்து முடிந்த அளவு சீக்கிரத்தில் மனனம் செய்ய விட்டனர். மனனம்செய்து பயிற்சியுடையவர்களில் பெரும்பாலானோர் பந்தயத்தில் தோற்றனர். இது மனோதத்துவ நிபுணர்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது. பள்ளிப் பிராயத்தில் ஞாபக சக்தியைப் பலப்படுத்துவதாகக் கூறி மனனம் செய்யாத எம்மை, பெற்றோரும் பள்ளி ஆசிரியரும் தாங்கொணாத் துயருக்குள்ளாக்கியிருக்கின்றனர். ஒருவர் சினிமாவில் கூறியதுபோல், நடந்தவைகள் நடந்தவைகளாக விருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக விருக்கட்டுமென நினைவின் சக்தியை வலுப்படுத்தும் வழிகளை ஆராய்வோம். நாம் கற்பவைகளை விரைவில் நினைவில் வைத்திருப்பதற்கும்,பின் வெளியே கொண்டுவருவதற்கும் மூன்றே வழிகள் தான் உள்ளன. முதலாவதாக, கற்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் அவதானிக்கவேண்டும். இரண்டாவது அந்த விஷயத்தை திரும்பவும் திரும்பவும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். மூன்றாவதாக நினைவில் பதிவதற்கு உதவியாக, அப்பொருளை ஒத்த விஷயங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். இம்மூன்று தந்திரங்களும் மறதியை மடக்கும் மந்திரங்கள் போன்றவை. கீழே இவைகளைச் சற்று நுட்பமாக நோக்குவோம்.

### அபிமானமும் அவதானமும்

அவதானம் முக்கியம் என்பதற்கு அதிக உதாரணங்கள் தேவையில்லை. ஆனால்மனத்தை அங்குமிங்கும் அலையவிடாது கவனமாக அவதானிப்பதற்கு, கற்கும் பொருளில் விருப்பம் அல்லது பற்றுதல் தேவை. இல்லாவிடில் நினைவில் படிய வைப்பது கடினம். 'கிரிக்கட் ஸ்கோர்' ஒரு தடவை கேட்டவுடன் நினைவில் கொள்வோருக்குக் கிரேக்கர் ஞானி பிளேட்டோவின் பிறந்த திகதி நினைவில் நிற்கா! (ஏன் தான் சரித்திரத்தில் இவைகளை நினைவில் வைக்கும்படி வற்புறுத்துகிறார்களோ எனக்கும் புரியவில்லை) சிலருக்கு கார்களின் இலக்கங்கள் நினைவில் இலகுபடியும் ஆனால் இரசாயனத்தில் அணு எண்கள் எட்டாப் பழங்களே. ஒரு மாணவன் தான் நேசிக்கும் பாடங்களிலேயே திறமையாக விருப்பதை நாம் நன்கறிவோம்.

(5ம் பக்கம் பார்க்க)





ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

# உலகத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்த உன்னத திருநாளே மே தினம்

— கே. ஐ. நாகராசன் —

**எட்டு மணித்தியால வேலை என்ற கோரிக்கையை ஆதரித்து 1886-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அமெரிக்காவிலுள்ள முக்கிய நகரங்களில் எல்லாம் ஒரு பிரமாண்ட வேலைநிறுத்தம் நடைபெற்றது. சிக்காக்கோ நகரத் தொழிற்சாலை ஒன்றின் முன்னிலையில் கூடிநின்ற தொழிலாளரை அமெரிக்க ஆட்சியாளரின் துப்பாக்கி வேட்டுகள் பதம் பார்த்தன. பல பாட்டாளிகள் பலியாயினர்.**

"உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்!" என்ற உன்னத கோஷத்துடன் கடந்த 72 ஆண்டுகளாக மே தினம் உலகம் எங்கணும் கொண்டாடப்பட்டு வருகிறது. உலக அரங்கில் தொழிலாளர்களின் இயக்கங்கள் வளர்ச்சியடைந்துவரும் இக்காலப் பகுதியில் முதலாளித்துவ நாடுகளில் சம்பள உயர்வு கோரி, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை நாம் அவதானிக்க முடிகிறது.

முதலாளித்துவ நாடுகளையெல்லாம் பொருளாதார நெருக்கடி அபாயகரமாகப் பாதித்துள்ளது. அந்நாடுகளிலுள்ள பாட்டாளிகள் கடுமையாகப் பொருளாதாரத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இறந்துபட இருக்கும் இம் முதலாளித்துவ நாடுகளில் எல்லாம் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் பயங்கர யுத்தத் தளபாடங்களையும் உலகத்தையே அழிக்கக் கூடிய ஜலவாயுக் குண்டுகளையும் நாளுக்கு நாள் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். இத்தகைய பேரபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் உண்டு.

தொழிலாள வர்க்கத்தின் சர்வதேசிய விடுதலைப் போராட்டம் தான் உயர்ந்த வழி! சிறந்த வழி! என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டார்கள்! அதனால்தான் என்னவோ, உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்! என்ற கோஷத்தை எல்லா நாடுகளிலும் உரத்த குரலில் கேட்க முடிகிறது. குறிப்பாக, முதலாளித்துவ நாடுகளில், ரஷ்யா, சீனா, யூகோஸ்லேவியா, போன்ற நாடுகளிலெல்லாத் மே தினத்தை ஓர் தேசியம் திருவிழா போன்று கொண்டாடுகிறார்கள்.

நமது இலங்கை அரசாங்கமும் மே தினம் கொண்டாடு முகமாகக் கடந்த 6 ஆண்டுகளாக இத்தினத்தை விடுமுறை நாளாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்! என்ற உன்னத தத்துவத்தை 1884-ம் ஆண்டிலேயே சமதர்மச்சிற்பி "கார்ல்மார்க்ஸ்" கூறினர். அப்போது அவருக்குக்கிடைத்த பரிசுகள் கேலியும் கிண்டலும் தான். அவர் கூறிய தத்துவத்தின் போக்கைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்கிவருகிறது இம் மேதினம்!

## மேதினம் என்றால் என்ன?

கடந்த 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி 1886-ம் ஆண்டு மே மாதம்முதலாந்திகதி, வட அமெரிக்க நாட்டிலுள்ள சிக்காக்கோ நகரத்தில் தொழிற்சாலை ஒன்றின் முன்னிலையில் கூடிநின்ற தொழிலாளரை நோக்கி அமெரிக்க ஆட்சியாளரின் துப்பாக்கியில் இருந்து குண்டுகள் பாய்ந்தன.

அதன் விளைவு! பல பாட்டாளி மக்கள் பலியாயினர்! காரணம்? இரவு பகலென்று இடைவிடாது இயந்திரத்தோடு இயந்திரமாக இனி மேலும் வேலை செய்ய முடியாது என்று அமெரிக்கத் தொழிலாளர்கள் உணர்ந்ததோடு மட்டுமல்ல, உரத்த குரலிலும் எடுத்துக் கூறினர்கள். எட்டு மணித்தியால வேலை என்ற கோரிக்கையை ஆதரித்து, 1886-ம் ஆண்டு மே மாதம் முதலாம் தேதி அமெரிக்காவில் முக்கிய நகரங்களில் எல்லாம் ஓர் பிரமாண்டமான வேலைநிறுத்தம் நடைபெற்றது. எழுச்சியுற்ற தொழிலாள வர்க்கத்தை துப்பாக்கி முனையால் ஒழித்து விடலாம் என்றெண்ணிய ஆட்சியாளர்கள் அன்று பல பாட்டாளிகளின் உயிர்களைப் பலி வாங்கினர்.

மே மாதம் நாலாந்தேதியாகியும் உழைப்பாளிகளின் உணர்ச்சி குறையவில்லை. சிக்காக்கோ, நகரத்திலே ஹேமார்க்கட் சதுக்கத்தில், ஆட்சியாளரின் அநியாயத் துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்த்து மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கூட்டத்திலே ராணுவ வீரர்களின் துப்பாக்கிகள் தொழிலாளிகளின் கூட்டத்தை நோக்கிக் கொண்டே இருந்தன. அந்நேரத்திலே...! முதலாளித்துவத்தின் கைக்கூலி தொழிலாள வர்க்கத்தின் கருங்காலி போன்ற ஒருவன் அணிவகுத்து நின்ற ராணுவத்தை நோக்கி ஒரு கைக்குண்டை வீசினன்! அவ்வளவு தான்! மறுபடியும் தொழிலாளர்கள் இதயங்களில் துப்பாக்கித் தோட்டாக்கள் ஊடுருவிச் சென்றன. பலர் காயமடைந்தனர். 12 பேர் உயிர் நீத்தார்கள். சிக்காக்கோ நகரிலே வீசிய அடக்குமுறைப் புயல் அமெரிக்கா எங்கணும் பரவியது.

1887-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி, மே மாதம் நடைபெற்ற போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய அகர்ட்ஸ்பைஸ், ஆல்பர்ட்பார்சன்ஸ், அடார்பிஷர், எங்கெல் ஆகியோர்களை தூக்குமேடையிலே தொங்கவிட்டனர். மைக்கல் ஸ்க்வாப், சாமுவேல் பீல்டன் போன்றோருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## மாநாட்டில் மே தீர்மானம்

1889-ம் ஆண்டு இரண்டாவது அகிலத்தின் முதலாவது மகாநாடு பாரிஸ் நகரத்தில் நடைபெற்றது. சரித்திரம் கண்டறியாத தனிப்பெரும் போராட்டம் நடாத்தி உயிர் நீத்த உத்தமத் தியாகிகளின் ஞாபகார்த்த நாளாக இம் மே தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று அம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படியே 1890-ம் ஆண்டு தொடக்கம்ஒவ்வொரு ஆண்டும் மே 1-ம் தேதி உலகத் தொழிலாளர்களின் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

எந்த நோக்கத்திற்காக ஹேமார்க்கட் சதுக்கத்தில் தொழிலாளர்கள் போராட்டம் நடாத்தினர்களோ, அந்த நோக்கம் வெற்றி பெற்றதுடன், இன்னும் பல உரிமைகளைப் படிப்படியாகத் தொழிலாளர்கள் பெற்று வருகிறார்கள்.

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் உரிமைக்காக உயிர்த் தியாகம் செய்த அந்த உத்தமத் தியாகிகளைச் சிரம் தாழ்த்தி வணங்குவதோடு, அவர்கள் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டத்தின் ஒளி மங்காது பிரகாசிக்கச் செய்வது நமது கடமையாகும்.

# மறதியை மடக்கும் மந்திரம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பவும் திரும்பவும் கவனத்தில் கொண்டு வருவது நினைவில் வைப்பதற்கு உதவுவது நாம் நன்றாகப் பள்ளிப் பிராயத்தில் அறிந்ததாகும். ஒரு புதியவூரில் தெருக்களைக் கவனித்துச் செல்கிறோம், ஆனால் சொந்த ஊரில் கண்ணை மூடிக்கொண்டே பாடசாலைக்கு போகமுடியும்.ஏனெனில்நினைவு முயற்சியின்றி பழக்கத்தினால் செல்லுகிறோம். இது போலவே திரும்பவும் திரும்பவும் கவனத்தில் கொள்வதால் ஒரு விஷயத்துடன் நாம் சகஜமாகப் பழகிவிடுகிறோம்.

ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் இந்த மந்திரத்திலும் ஒரு தந்திரத்தைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். இதை விளக்குவதற்கு உதாரணமாகப் பத்துக் குறள்களை எடுப்போம். இவைகளை ஒரே மூச்சாக மனப்பாடம் செய்யும் நேரம் மூன்று மணியாகவிருக்கட்டும். ஒரேயடியாகவில்லாமல், இன்று பத்துத்தடவையும் நாளை பத்துத்தடவையுமாக ஒவ்வொரு நாளும் பத்து நிமிடங்களே செலவிட்டு வாசிப்போம். மூன்று நாலு நாட்களில் பத்துக் குறள்களும் மனதில் ஆழப்படிந்து விடுகின்றன. மொத்தமாகச் செலவழித்த நேரத்தின் தொகை ஒரு மணியளவிலேயே இருக்கும். ஒரு வாரத்திற்குப்பின் ஒரே மூச்சில் (3 மணி செலவில்) மனனம் செய்தவர் ஒப்பிக்கத் திண்டாடுவர். ஆனால் ஒரு வாரமாக (1 மணி செலவில்) மனப்பாடம் செய்தவர் ஒரு மாதத்திற்குப் பின்பும் ஒப்பிக்கத் திண்டாட நேராது. இந்தத் தந்திரத்தின் மகிமையை மாணவர்கள் நன்கு உணரவேண்டும். கலாசாலை போகும் மாணவர் கற்க வேண்டியது அதிகம். எல்லாவற்றையும் கீழ்வகுப்புகளில் மனப்பாடம் செய்வது போல் கற்க முயன்றால் வேறு ஒரு பொதுக் காரியங்களுக்கும் நேரம் கிடையாத புத்தகப் புழுக்களாகத் திகழ வேண்டி நேரிடும்.

புத்திசாலிகள் பாவிப்பது மூன்றாவது மந்திரம். ஒவ்வொரு புது விஷயத்தையும் தமக்கு ஏற்கனவே தெரிந்த விஷயத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவர்கள் வழக்கம். எதை நினைவில் வைக்க வேண்டும், எது தேவையில்லை என்பதை உணர்ந்து அவர்கள் அதனிமித்தம் முயற்சிப்பர். நாம் அதிகமாக ரசிப்பது, விகட எழுத்தாளர்களையும் நடிகர்களையுமே. அவர்கள் யாவரும் பொதுவான விஷயங்களை எமக்குப் புதிய கோணங்களில் பார்க்கும்படி செய்வர். இவை இவர்களின் ஒப்பிடும் திறமையில் தங்கியிருக்கிறது. நாமும் அதனைப் பின்பு மறக்கமாட்டோம். வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சரீர சாஸ்திரத்தில் ஆயிரத்துக்கு மேலாகவுள்ள நரம்புகளுக்கும் தசைகளுக்கும் எலும்புகளுக்குமுள்ள பெயர்களை நினைவுபடுத்துவதற்காக அவற்றின் முதலெழுத்துக்களை பாவித்து விகடமாகவோ அல்லது விகாரமாகவோ பாடல்களும் வசனங்களும் எழுத முயற்சிப்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரிகளில் தாவர மிருக சாஸ்திரங்கள் படிமுறைத் தோற்றத்தின் அடிப்படையில் கற்பிப்பது அவற்றை ஒப்பிட்டு விளங்குவதற்கும் நினைவுபடுத்துவதற்கும் உதவுகிறது. தமிழ் இலக்கியத்திலுள்ள உவமைமொழிகள் யாவும் ஆதியில் ஒப்பிடும் வாக்கியங்களாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நாம் கட்டுரைகளில் அவற்றைச் சிதறுவதற்காக மனனம் செய்யவேண்டியிருக்கிறது. (இதனால் மேலதிகமாக 'மார்க்குகள்' பெறலாம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலிருக்கவில்லையா?

ஞாபக உறுப்புகள் ஐம்புலன்களாலேயே கற்றுக் கொள்கின்றன. பாடசாலையில் சிறுவயதில் புத்தகங்களை வாசிப்பதிலும் ஆசிரியர் கூறுவதைக் கேட்பதும் உருவங்களைப்பார்ப்பதும் விளையாட்டுகளுமே சிறந்த முறையில் நினைவு படுத்துகின்றன. உதாரணமாக ஒரு தாவரத்தைக் காணுமல் ஆசிரியர் கொடுத்த விவரத்தை மனப்பாடம் செய்வதிலும், அவற்றைக் கண்ணாலே கண்டு, தானே படம் வரைந்து வைத்தால் பரீட்சையில் விவரிப்பது சுலபமாகும். பாடக் குறிப்புகள் கொடுக்கும் ஆசிரியர்கள் இங்கு கவனிக்க வேண்டும். அச்சு யந்திரம் தமிழ் நாட்டுக்கு வருமுன்னே கேள்வி ஞாபகமே பிரதானமாக விருந்தது. இன்றோ பார்வை நினைவும் (பத்திரிகைகள் மூலம்) கேள்வி நினைவும் (வானொலிமூலம்) அறிவு வளர்ச்சிக்கு சமபங்காக மாணவர்களுக்கு உதவுகின்றன.

மறதியின் மகிமைகளைக்கூற மறந்து விட்டேனே. அதிகமாகக் கூறுவதற்கு இடம் போதாது. சுருங்கச் சொல்லின், மறைந்த உறவினர், தோல்வியடைந்த காதல், சித்தியடையாத பரீட்சை முதலியவைகளின் வேதனையைக் காலாகாலத்தில் நாம் மறந்து விடுகிறோம். இல்லையேல் மனோ வியாதிக்காரராகவோ தற்கொலை செய்யவோ நேரிடும். இன்றைய சமுதாயத்தில் மூளையின் சக்தி தேகபலத்திலும் மேலாக உதவுகிறது. நாம் நினைவின் வலுவையும் மறதியின் சாந்தத்தையும் அவ்வப்போது பெறக் கற்றுக்கொள்ளவேண்டும்.

# விடி விளக்கு

—மு. பொன்னம்பலம்—

மனைச் சோலையில் இருளில்
மலரும் ஒளி விளக்கே
உனைப் பூவெனச் சூடி
உவகை பெறும் இரவே!

கூத்துப் பயில் பெண்ணாய்
குதிப்பாய் இளங் காற்றில்!
கோத்துப் புகை மாலை
கொடுப்பாய் அடுக்கடுக்காய் !

பகலின் ஒரு துளியாய்
படர்வாய் இருளுள்ளே!
அழகு மனை நுதலில்
அமரும் ஒளிப் பொட்டோ?

குடிசை பல வுள்ளே
குப்பி தனில் ஒளிர்வாய்
நெடிய பல மனையில்
நீமின் விளக்காமே!

ஒடியும் வரை கதிராம்
உந்தன் இமை கொட்டி
விடியும் வரை வாழும்
விளக்கே விடி விளக்கே!

# உலக மேடை

டி. எம். எம்.

## உலகம் போற போக்கு

அமெரிக்கா மீண்டும் அணுசோதனையை ஆரம்பித்து விட்டது என்ற செய்தியைக் கேட்டு பலநாடுகளில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடுநிலைமைநாடுகளும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவின் நடவடிக்கையை வழக்கம் போல் கண்டித்துள்ளன. இந்தக் கண்டனங்கள் பாரதூரமானவை தான் என்ற போதிலும் ஒரு வகையில் இவை நகைப்பையே மூட்டுகின்றன. ஏனெனில் ரஷ்யா அணுசோதனை நடத்த முற்பட்டபோது அது நியாயமானது தான் என ரஷ்யாவும், கிழக்கு ஐரோப்பியநாடுகளும், இதர கம்யூனிஸ்ட்சார்பு நாடுகளும் கூறின. மேற்குநாடுகளும், நடுநிலைமைநாடுகளும் இதைக் கண்டித்தன. ரஷ்ய அணுசோதனையை ஆதரித்த நாடுகள் அமெரிக்க அணு சோதனையைக் கண்டிக்கின்றன! ரஷ்யாவைக் கண்டித்த மேற்கு நாடுகளோ அமெரிக்க அணு சோதனை நியாயம்தான் என வாதிக்கின்றன! ஆனால் எவர் அணுசோதனை நடத்திய போதிலும் அதை வன்மையாக எதிர்த்தவை நடுநிலைமை நாடுகள் மட்டுமே ஆகும்.

"இந்த நடுநிலைமை நாடுகளுக்கென்ன? இவைகள் கையில் தான் அணுக்குண்டு இல்லையே. எனவே கண்டனம் செய்வது அவைகளுக்கு எளிது" எனவும் சிலர் கூறலாம். அணுவல்லரசுகளும் மனதிற்குள் இப்படியே நினைத்துக் கொண்டிருக்கலாம். எனவே தான், கண்டனத்திற்குப் பயப்படாமல் அமெரிக்காவும், ரஷ்யாவும் அணு சோதனைகளை நடத்துகின்றன. சோதனைகளை ஆரம்பித்தபின் கண்டனங்களும் சிறிது காலத்திற்குத் தான் நீடிக்கும். பின் மறைந்து விடும். உலகில் ஏற்பட்ட பல சர்வதேச கொந்தளிப்புகளின் கதி எல்லாம் இப்படித் தானே ஆயிற்று. இவையெல்லாம் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குத் தெரியாதா என்ன?

இப்போது அமெரிக்கா அணுசோதனை ஆரம்பித்து விட்டது. இச்சோதனை முடிவுறுவதைத் தொடர்ந்து ரஷ்யா மீண்டும் தன்சோதனைகளை ஆரம்பிக்காதென்பதற்கு என்ன உத்தரவாதம்? எனினும் ஜெனிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாடும், அணுசோதனைத் தடை பற்றிய மூவல்லரசு பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுவரும் இச்சமயத்தில் அமெரிக்கா இவ்விதச் செயலில் ஈடுபட்டது பொறுக்க முடியாததாகும். ஜெனிவா மகாநாடு ஆரம்பமான சமயத்தில் ரஷ்யா சக்திவாய்ந்த அணுக்குண்டைப் போட்டது பெரும் அபசகுனமாய் இருந்தது. ஜனாதிபதி கென்னடியும், மேற்குநாடுகளும் அதைக் கண்டித்த தொனி சரித்திரத்தில் இணையற்றதாகும். ஆனால் அதே அமெரிக்கா, ஜெனிவா மகாநாட்டை முட்டுக்கட்டைக்கு மேல் முட்டுக்கட்டை எதிர்நோக்கியிருக்கும் போது, அணுசோதனையை நடத்தியிருக்கிறது. இவையெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் சிரிப்பு வரும். "உலகம் போற போக்கைப்பாரு, டிங்கிரி டிங்காலே" என்று பாடத்தான் தோன்றும்.

மேலும், அணுசோதனைகளைத் தடைசெய்வது பற்றிய மூவர் கமிட்டியில் நடுநிலைமை நாடுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென அமெரிக்கா கூறிய யோசனையை ரஷ்யா நிராகரித்துவிட்டது. இது, நடுநிலைமைநாடுகளுக்கு விரோதமான போக்கு என யாரும் கொள்ளத்தேவையில்லை. உண்மையில் நடுநிலைமை நாடுகளிடம் ரஷ்யாவுக்குள்ள மதிப்பையே இது புலப்படுத்துகிறது. இந்த மூவர் கமிட்டி நடு நிலைமை நாடுகளையும் கொண்டு விஸ்தரிக்கப்பட்டால் அதனால் என்ன நஷ்டம்? அப்படி விஸ்தரிக்கப்படும் கமிட்டியில் நடுநிலைமை நாடுகள் இணங்கத் தக்க ஒரு யோசனையைத் தெரிவிக்கக்கூடும். உலகத்துக்கு அது நியாயமாகவும்படக் கூடும். அமெரிக்கா இந்த யோசனையை ஒருவேளை ஏற்றுக்கொள்ளலாம். அப்போது ரஷ்யாமட்டும் இதை எதிர்ப்பதென்ருல் உலகின் கண்களில் அது கேவலமாகப் படும். எனவேதான் அமெரிக்க யோசனையை ரஷ்யா ஏற்கவில்லை.

மேலும், ஆயுதப் பரிகரண மகாநாட்டில் ரஷ்யாவின் போக்கு ஒரு விஷயத்தை உணர்த்திவருகிறது. ஆயுதப் பரிகரணம்பற்றிய பேச்சுவார்த்தைகளில் ரஷ்யாஒத்துழைத்து வருகிறதென்றும், அணுத் தடைப் பிரச்சினையில்மட்டும் அது விடாப்பிடியாக இருந்து வருகிறதென்றும் சிலகாலத்திற்குமுன் மகாநாட்டில் பங்குபற்றிய ஒரு பிரதிநிதி தெரிவித்தார். இது உண்மையானுல் ரஷ்யா அணுத்துறையில் மிகவும் சக்தி பெற்றிருக்கிறது என்றே கொள்ளவேண்டும். எனவே தன் மகத்தான ராணுவ பலத்தை இந்த நிலையில் அழித்துக்கொள்ள அது விரும்பவில்லை. அணுசக்தியில் தனது பலம் குறைந்தால் உலகின் (இரண்டில் ஒன்ருன) முதல்தர வல்லரசு ஸ்தானத்திலிருந்து தாம் வீழ்ச்சியடைந்துவிடக்கூடும்எனவும் ரஷ்யா கருதலாம். எனவே, அணுசோதனைத் தடை, ஆயுதப் பரிகரணம் ஆகிய இரு முனைகளில் ஒன்றில் அது தொடர்ந்து யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. இரண்டிலும் இரு வல்லரசுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுவிட்டால் அமெரிக்கா உலகின் முதலாவது வல்லரசாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. அதன் மகத்தான பொருளாதார பலமே இதற்குக் காரணம். அமெரிக்காவின் பொருளாதார நிலையை எட்டிப்பிடிக்கும்வரை ஆயுத பலத்தில் அந்நாட்டை மிஞ்சவே ரஷ்யா முயற்சிக்கும். இன்றேல் ரஷ்யாவின் அந்தஸ்து வீழ்ச்சி அடைந்துவிடும் அதே சமயம் ஆயுதக் கெடுபிடியை நீடித்து வைக்க அமெரிக்காவும் விரும்பக்கூடும். இதற்கு அந்நாட்டின் பொருளாதாரமே காரணம். வாழ்வையும் சாவையும் பிரதிபலிக்கும் ஆயுதப்பரிகரணம் எவ்வளவு முக்கியமானது என்பது சாதாரண கண்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அதிர்ஷ்டவசமாக பூரண ஆயுதப் பரிகரணம் வெற்றியடைந்து அதை அமுலாக்க முயற்சிக்கும்போது அது வாழ்க்கையின் எத்தனை பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தது, அதனல் நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் எவ்விதம் பாதிக்கப்பட்டிருந்தன என்பதை அனைவரும் உணரக்கூடும்.

## காஷ்மீர்

காஷ்மீர் பிரச்சினை சமீபத்தில் மீண்டும் பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படவிருக்கிறது. (இப்பிரச்சினை பற்றி இப்பத்தியில்முன்பே மிக விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது) தற்போதைய நிலையில் பாதுகாப்புச்சபை விவாதமோ அல்லது அதன் முடிவோ இருநாடுகளுக்கும் எவ்வித நன்மையையும் செய்துவிடப் போவதில்லை. பதிலாக, பாதுகாப்புச் சபை வெறும் பிரசார மேடையாகத்தான் இருக்கும். ஆனல் இம்முறை சபையில் காஷ்மீர் விவாதம் களை கட்டும் என்பதில் சந்தேகமில்லை. இருநாடுகளின் சார்பாகவும் இரு பெரிய புலிகள் அங்கு மல்லுக்கு நிற்பார்கள் என்பதே இதற்குக் காரணம். பாகிஸ்தானின் சார்பாக சர். முகம்மது ஸபருல்லாகானும், இந்தியாவின் சார்பாக திரு. வி. கே. கிருஷ்ணமேனனும் விவாதத்தில் பங்குபற்றுவார்கள். இருவரும் ஐ. நா. சபையில் நீண்டநேரம்பேசி சபை ரிக்கார்ட்டை முறியடித்தவர்கள்.

முன்னைய பாதுகாப்புச்சபை நாடகத்தைவிட இந்தமுறை நாடகத்தில் சிறு மாறுதல்கள் இருக்கலாம். அதாவது, இந்தியாவுக்கெதிரான தீர்மானம் எதையும் சபை நிறைவேற்றினல் அதை அமெரிக்கா நிச்சயம் ஆதரிக்காது. பிரிட்டனின் தொனி எப்படியிருக்குமென்பது சந்தேகம். ஆயினும் ஓரளவுக்கு மாற்றம் இருக்கக் கூடும் ரஷ்யாவின் 'வீட்டோ' (ரத்து) அதிகாரமும் இருக்கும் எனவேதான் இந்த விவாதத்தை சபைக்கு வராமல்செய்ய அமெரிக்கா முன்பு திரைமறைவில் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டது. இந்தியாவைப் பொறுத்தவரை காஷ்மீர் பிரச்சினை தீர்ந்து போன விஷயம். இன்னும் தீராதிருக்கும் அம்சம் என்னவென்ருல் "அஸாத் காஷ்மீர்" எனப்படும் பிரதேசத்திலிருந்து பாகிஸ்தான் வாபஸ பெறவேண்டும் என்பதே. பாகிஸ்தான் மட்டுமே காஷ்மீர் பிரச்சினையை இன்னும் உயிருடன் வைத்துக்கொண்டிருக்கிறது.

காஷ்மீர் பிரச்சினையின் பின்னணியில் நியூயோர்க்கில் ஒரு வதந்தி உலவிவருவதாகக் கூறப்படுகிறது. நேருவுக்குப் பின் இந்தியா துண்டுபட்டுப் போய்விடும் என்றும், இந்த நிலை பாகிஸ்தானுக்கு நன்மை பயக்குமென்றும் ஜனதிபதி அயூப்கான் தனிப்பட்ட சம்பாஷணை ஒன்றில் கூறினராம். மேலும் பாகிஸ்தான் துருப்புக்கள் அணிவகுக்க ஆரம்பித்தால், அது காஷ்மீரை மட்டுமின்றி புதுடில்லியையும் சென்னையையும்கூட கைப்பற்றும் என பாகிஸ்தான் ராணுவத்தலைவர்கள் கூறியதாகவும் இந்த வதந்தி மேலும் கூறுகிறது. சீனவின் உதவிபெற்று இவ்விதச் சாதனையை அது புரியப்போவதாய்க் கூறப்பட்டது. இந்த வதந்திகள் உண்மையாயிருந்தால் அதைவிட முட்டாள்தனம் வேறொன்றுமிருக்க முடியாது.

நேருவுக்குப்பின் இந்தியா துண்டுபட்டுப் போய்விடும் என்று முன்பு சிலவட்டாரங்களில் அஞ்சப்பட்டது உண்மைதான். ஆனல் இந்தியாவில் வளர்ந்துவரும் ஜனநாயகம் அதற்கு இடங்கொடுக்காது. இந்தியா கண்டுவரும் துரித பொருளாதார விருத்தியும், அங்கு வளர்ச்சி பெற்றுவரும் ஜனநாயக அம்சங்களும், எல்லாவற்றிற்கும மேலாக, அதிகாரங்கள் நிறைந்த மத்திய அரசாங்கத்தைக்கொண்டுள்ள இந்தியாவின் பலம் வாய்ந்த அரசியல் அமைப்புச் சட்டமும் இந்த நிலைமைக்கு இடம் கொடுக்குமென நம்புவதற்கில்லை. நிர்வாகத் திறனும், ராணுவபலமும் இதற்கு மேலும் அனுசரணையாக இருக்கின்றன.

ஹைதராபாத்தில் இந்தியா "போலிஸ் நடவடிக்கை" எடுத்துக் கொள்வதற்குமுன் அங்கு ரஸாக்கர்கள் என்ற கொள்ளைக் கூட்டம் பெரும் அட்டம் புரிந்தது. இந்திய வீரன் ஒருவன் தம் எல்லைக்குள் புகுந்தால் [illegible] புதுடில்லிவரை ஊடுருவுவார்கள் என்றும், டில்லி செங்கோட்டையில் தங்கள் கொடி பறக்கும் என்றும் அவர்களது தலைவரான காஸிம்ரஜ்வி அப்போது கூறினர். நடந்தது என்ன? ஹைதராபாத்தை 3 தினங்களில் இந்திய ராணுவம் கைப்பற்றியது. காஸிம் ரஜ்வி புதுடில்லிக்கு கைதியாகக் கொண்டு வரப்பட்டார். இந்த ஞாபகம் தான் பாகிஸ்தான் படையெடுப்பு பற்றி நினைக்கும்போது வருகிறது. இவ்வித வதந்திகள் கூட அமெரிக்காவுக்கு எரிச்சலை உண்டுபண்ணும். "வீட்டோ" ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா நவீன ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு வழங்கிவருகிறது. கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்கு மட்டுமே இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என அமெரிக்கா பன்முறை வாக்களித்தும் கூட, எந்தத் தைரியத்தினல் பாகிஸ்தான் இப்படிப் பேசுகிறது என நம்புவது கஷ்டமில்லை. அவசியம் நேர்ந்தால் "வீட்டோ" ஆயுதங்களை உபயோகிக்க அது தயங்காது என்றே தெரிகிறது. (சில காலத்துக்கு முன் காஷ்மீர் எல்லையில் இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பது இந்த உண்மையை நிரூபிக்கப்போதுமானது.) மேலும் சீனவுடன் சேர்ந்து இந்தியாவைத் தாக்குவதென்பது விளையாட்டுத்தனமாகும். அரசியல் கொள்கைகள், மதம், பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களிலும் முற்றும் முரணன கொள்கைகளை உடைய ஒரு நாடு மற்ற நாட்டுடன் எந்த ரீதியில் உறவுவைக்க முடியும். இது தற்கொலை உறவாகத் தான் இருக்க முடியும். இந்தியா துண்டுபடுவது பாகிஸ்தானுக்கு நன்மையல்ல. தீமையேயாகும். சீன பாகிஸ்தானில் அப்போது சுலபமாக ஆக்கிரமிப்புச் செய்யும். (ஏற்கெனவே பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் சீன உரிமை கோரியிருக்கிறது) மேலும் கம்யூனிஸ எதிர்ப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்காவுடன் ராணுவக்கூட்டில் சேர்ந்திருக்கும் ஒருநாடு கம்யூனிஸ்ட் நாடு ஒன்றுடன் எப்படிச் சேரமுடியும்? அமெரிக்கா அதை ஒருபோதும் அனுமதிக்கவும்செய்யாது. ஜனதிபதி அயூப்கான் சமீபத்தில் அரசியலுககு வந்திருக்கிறர். எனவே அவரது ராஜதந்திரமற்ற பேச்சுக்கள் பற்றி ஆச்சரியப் படுவதற்கில்லை.

## "ஓம் நமசிவாய"

சாதாரணமாக நேருவைப் பொறுத்தவரை அரசியலிலும் சிந்தனையிலும் அவர் எப்படி சர்வதேசியவாதியாய் விளங்குகிறரோ அதேபோல் தெய்வ நம்பிக்கையிலும் அவர் பரந்த நோக்குள்ளவர். உலகை இயக்கும் ஒருசக்தி இருக்கிறதென்று அவர் ஒப்புக கொள்கிறர். அந்த சக்தியை கடவுள் என்றே வேறு பெயராகவோ அழைக்கலாம் என்பது அவர் கருதது. சிவன் என்றும், விஷ்ணு என்றும் தனிப்பட்டு அவர் சிந்திப்பதில்லை. இது பற்றி அவரது சகாக்கள் - ஏன், மகாத்மா காந்தி கூட குறைப்பட்டுக்கொண்டதுண்டு ஆயினும் "நேருவுக்கு தெய்வ நம்பிக்கை இல்லையாயினும், அவரது செயல்கள் தெய்வீகத்தன்மைவாய்ந்தவை" என மகாத்மா ஒருதடவை கூறியிருக்கிறர்.

சிலசமயங்களில் சமயஅனுஷ்டானங்களைப்பற்றி நேருஜி கூறியுள்ளது வைதீக ஹிந்துக்கள் சிலருக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளது. சாதார

(7ம் பக்கம் பார்க்க)

## பூஜ்யம் தபால்

ஸ்ரீ ஜவஹர்லால் நேரு
பிரதம மந்திரி,
(முகாம்) டேராடூன்.

பிரதமரே!

தாங்கள் 'ஓம் நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திர உபதேசத்தை, சப்தரிஷி ஆசிரமத்திலே ஒரு பெரிய சாதுவின் மூலம் பெற்றதாக ஒரு செய்தியைப் படித்தேன். மிகமகிழ்ச்சி.

உபதேசம் எதுவும் பெறவில்லை என்றும், ஏதோ அந்த சாதுவின் மனம் புண்படாதிருக்க, அவருக்காக அதைச் சொல்லி வைத்ததாகவும் நீங்கள் சொல்லக்கூடும். என்ருலும் தாங்கள் கூச்சப்படாமல், இந்த மந்திரத்தை எல்லாரும் கேட்க வாய்விட்டுக் கூறியது தங்கள் வாழ்க்கையிலேயே ஒரு நல்ல திருப்பம் என்றே நம்புகின்றேன்.

இது மூடநம்பிக்கை என்றும் இதில் அர்த்தமெதுவும் இல்லை என்றும் தாங்கள் அலட்சியம் செய்யலாம். ஆனல் ஒன்றை நினைவுபடுத்துகிறேன். தங்களது அரசியல் குருவென்று அடிக்கடி தாங்கள் பெருமையுடன் கூறும் மகாத்மா காந்தி, ஜபம், தியானம், கூட்டுப் பிரார்த்தனை இவற்றைச் செய்ததுடன், ஆண்டவனை மறக்காதிருக்க மந்திர ஜபத்தை சதா செய்துவந்தார். தாங்கள் மகாத்மாவின் படத்தை தங்கள் ஆபிஸ் மேசை மீது வைத்து எப்போதும் அவரை மறவாதிருப்பதை நேரில் கண்டேன். மகாத்மாவின் வாரிசான தாங்கள் அதே மந்திர ஜபத்தின் மகிமையை அலட்சியம் செய்யமுடியாது.

"நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" என்று எங்கள் பாண்டி நாட்டிலே முதல் அமைச்சராக இருந்த மாணிக்க வாசகப் பெருந்தகை பாடிவைத்துள்ளது இச்சமயம் நினைப்புவருகிறது. இமயமலைச் சாரலிலே அந்தக் கைலாசபதியே ஒரு சாது உருவத்தில் வந்து வலுவிலே இந்த மந்திர உபதேசத்தைத் தங்களுக்குச் செய்து வைத்துள்ளதாகக் கருதுகிறேன்.

இதனல்என்ன பலன்என்று தாங்கள் கேட்கலாம். தமிழ் நாட்டில் அவதரித்த நான்கு சைவசமயகுரவர்களும், இந்த ஐந்தெழுத்தின் மகிமையை, பதிகங்களாகப் பாடிவைத்துள்ளனர். தயவுசெய்து அதை ஒருமுறை படியுங்கள். நற்றுணையாகவும், இருள் கெடுப்பதாயும், நலமிகக் கொடுப்பதாயும், இன்னும் எவ்வளவோ தங்கள் உண்மை அனுபவங்களைக்கூறி இருக்கிறர்கள்.

இன்று தங்களுக்கு சமயப் பிரசாரம் செய்வதாக எண்ணி அலட்சியமாக இருக்கப்படாது. இருகாரணங்களால் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதத் துணிந்தேன். ஒன்று அப்பெரியார்கள் பெற்ற இன்பத்தைத் தாங்களும் பெறவேண்டுமென்பது. தாங்கள் இந்திய பண்புக்கமைய நல்ல வழிகாட்டினல் பல படித்த வாலிபர்களும், அந்த வழியைப் பின்பற்றி நன்மையடையலாம். இன்று பாரத நாட்டிலே சர்வகலாசாலை வாலிபர்களில் பலரும், உலகிலும் மேலான இந்த விஷயங்களை மறந்து, கோணல் வழிகளில் அவர்கள் மனம் செல்லுவதைத் தாங்கள் அறிவீர்கள். மனதை நேர்வழிப் படுத்த வேறு சுலபமானவழி ஏதுவுமுண்டா?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:-

அடுத்த ஜூலை மாதம் தாங்கள் இலங்கைக்கு வர இருப்பதாகக் கேள்விப்பட்டேன். மிக மிக மகிழ்ச்சி. இலங்கை இந்தியர்கள் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்க இம்முறையாவது வழிபிறக்க வேண்டுமென்பது என்போல்

(7-ம் பக்கம் [illegible])

# சிவாஜியுடன் நடிப்பதற்கு அமெரிக்க நடிகை ஆவல்

"உங்களுடன் சேர்ந்து திரைப்படம் ஒன்றை எடுக்க நான் ஆவலுள்ளவளாக இருக்கிறேன்" என்றார் அமெரிக்க நடிகை ஷெல்லி வின்டர்ஸ் சிவாஜிகணேசனிடம். இங்கு செவ்வாய்க் கிழமை இரவு 'இருவானு இரவு'என்ற நாடகத்தை பார்த்த பிறகு சிவாஜி மேடைச்குப் பின்புறம் அந்த நடிகையைச் சந்தித்த போது அவர் இவ்வாறு கூறினார். டென்னஸ்ஸிவில்லியம்ஸ் எழுதிய இந்த நாடகம் பரிசு பெற்றதாகும்.

சிவாஜிகணேசனின் பெரிய நாடகக் குழுவுக்குத் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார் இந்த நடிகை. தாமும் மற்ற அமெரிக்கநடிகர்களும் சேர்ந்து இதே மாதிரி ஒரு நாடகக் குழுவை அமைகக விரும்புவதாக அவர் சொன்னார்.

நாடகத்திற்குச் செல்லுவதற்குமுன் சிவாஜி கணேசனுக்கு அன்றுமாலை இந்தியத் துணைத்தூதர் அலுவலகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான பேர்கள் வரவேற்புக்கு வந்திருந்தனர். நடிகர்களில் பிரசித்திபெற்ற ஸெலெஸ்டிஹோம் ஜோயி ஆடம்ஸ் ஆகிய இருவரும் வந்திருந்தனர். ஜோயி ஆடம்ஸ் சிவாஜியைச் சந்தித்துப் பேசுகையில் இந்தியாவில் இருக்கும் தமது நண்பர்கள் எல்லோருக்கும் தமது வணக்கத்தைத் தெரிவிக்கும்படியும் அண்மையில் இந்தியச் சுற்றுப்பயணத்தின் போது தாம் அச்சுற்றுப் பயணத்தை மிகவும் ரசித்ததாகத் தெரிவிக்கும்படியும் சிவாஜியை அவர் கேட்டுக்கொண்டார்.

### டெலிவிஷன் நிலையத்திற்கு விஜயம்

செவ்வாய்க்கிழமை காலை கணேசன் நேஷனல் பிராட்காஸ்டிங் கம்பெனியின் டெலிவிஷன் நிலையத்திற்கு விஜயம் செய்தார். 'என்பிஸி' யின் சர்வதேச நிகழ்ச்சித் துறை டைரக்டர் கிளாட் டபின்யூ ஸ்லேபாக் அவரை வரவேற்றார். கறுப்பு, வெளுப்பு வர்ண டிவிஸ்டுடியோக்கள், சினிஸ் கோஸ்ப், விடியோடேப் முதலியவற்றை சிவாஜிகணேசன் பார்த்தார்.

"தனது பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா நடத்தும் பெரும் போராட்டத்தில் உதவி செய்ய டெலிவிஷன் பெரும் பங்கு ஏற்க முடியும்" என்று ஸ்லேபாக் சிவாஜியிடம் கூறினார்.

"திருவிழா" என்ற இசை நாடகத்தை சிவாஜிகணேசன் திங்கட்கிழமை பார்த்தார். இது பிரான்சில் சர்க்கஸ் வாழ்க்கை பற்றிய கதையாகும். மேடையில் இசை அமைப்பும் தலைமை நடிகை மேரியா ஆல்பெர்கெட்டியின் நடிப்பும் 'அற்புதம், பிரமாதம்' என்றார் சிவாஜி.

பிரபல ரேடியோ டிவிநடிகர் மேஸன் ஆடம்ஸ் தமது நியூயோர்க் இல்லத்தில்சிவாஜிக்கு ஞாயிற்றுக்கிழமை விருந்தளித்தார். பிரபல அமெரிக்க ஆசிரியர் மார்க்கானெல்லி நாடகத் தயாரிப்பாளர் ரோஸமண்ட் கில்டர் முதலியோர் வந்திருந்தனர். கில்டர் இந்தியாவுக்கு அண்மையில் வந்திருந்தார்.

வரவேற்புகளில் கலந்து கொள்வது, பிராட்வேயில் நாடகங்களைப்பார்ப்பது ஆகியவற்றிற்கு இடையே சிவாஜி கணேசன் நியூயோர்க் நகரைச் சுற்றிப் பார்த்தார். எம்பயர் ஸ்டேட் கட்டடம், சூர்ஸி-ஏ கட்டடம் ஆகியவற்றின் உச்சியிலிருந்து நகரைப் பார்க்கையில் தலைசுற்றுகிறது என்றார் சிவாஜி. நியூயோர்க்நகர் வால்ஸ்டிரீட் பிரதேசத்தில் இருக்கும் பெடரல் மண்டபத்தில் காணப்படும் ஜோர்ஜ் வாஷிங்டன் சிலை அற்புதம் என்றார் சிவாஜி. சிலைவைக்கப் பட்டிருக்கும் இடத்தில் தான் வாஷிங்டன் அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக 1780-ம் ஆண்டில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

## உலகமேடை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ணமாக தெய்வாம்சம் பொருந்தியவைகளாகக் கருதப்படும் பொருட்களை அவர் அப்படிக் கருதுவதில்லை. உதாரணமாக பசுவையும், குதிரையையும் ஒன்றாகக் கருதுவதாக அவர் கூறியது உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு "சாது" வுக்குப் பிடிக்கவில்லை. எனவே நேருஜிமீது அவர் வழக்குத் தொடரவும் செய்தார். இந்தியாவிலுள்ள சாதுக்களில் ஒரு சிலரைத்தவிர, ஏராளமானோர் சோம்பேறிகள் என்பது அவர் கருத்து. ஆயினும் நேருமீது அவர்களுக்கு அன்பு குறையாதது அதிசயமே.

சமீபத்தில் நேருஜி ஹரித்துவாரத்துக்குச் செல்லும் வழியில் 'சப்தரிஷி' ஆசிரமத்தில் சிறிது தங்கினார். அப்போது வயோதிப சாது ஒருவர் நெற்றியில் அவருக்குத் திலகமிட்டு "ஓம்நமசிவாய" என்று கைகூப்பிக் கோஷித்தார். நேருவும் பதிலுக்கு "ஓம் நமசிவாய" என்றுகூற, சாதுவின் முகம் மலர்ந்தது. "வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி" என்பார்கள். கடவுளின் சக்தி எவ்வளவு பெரியது என்பதை தம்மையறியாமலே நேரு ஒப்புக்கொண்டுவிட்டார் அல்லவா?

### விற்பனைக்கு

ஈ. என். 1688 இலக்கமுள்ள பேஜோ "203" கார் விலைக்குள்ளது. விலை 5750/- ரூபா அல்லது கிட்டியது. யாழ்ப்பாணம் டிரேட் அன்ட் டிரான்ஸ்போர்ட்டில் பார்வையிடலாம்.



# படித்தவர்களை நடிக்க வைப்பதேன்?

### ஸ்ரீதர் விளக்கம்

"படிக்காதவர்கள் நடிக்கமாட்டார்கள் என்ற கருத்தால் அல்ல. படித்த புது முகங்களை வைத்து நடிக்க வைக்க வேண்டும் என்ற தன்னுடைய ஒரே ஆவலே அடுத்த படத்திற்கு குறைந்தது எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களை நடிக்க வைக்கும் முயற்சி என்று டைரக்டர் ஸ்ரீதர் கூறினார். இதுவரை வந்த ஏராளமான விண்ணப்பங்களில் 16 ஆண்கள், 4 பெண்களுக்கான விண்ணப்பங்கள் தகுதி உள்ளவைகளாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் இனி வருவதையும் சேர்த்து இறுதித் தேர்வு நடைபெறுமென்றும் பின்பு "காதலிக்க நேரமில்லை" படப்பிடிப்புக் துவங்குமென்றும் ஸ்ரீதர் தெரிவித்தார்.

சினிமா உலகில் நடத்தை சம்பந்தமாக எழுந்துள்ள சில கருத்துக்கள் படித்த புது முகங்களால் ஏற்படாது என்று நம்பலாம் என்றும் அவர் கூறினார்.

# கலை அரங்கம்

## பரதநாட்டிய முத்திரைகள் 'ரஷ்ய பாலே'நடனத்தில்உள்ளன

### அமைச்சர் பக்தவத்சலம் கருத்து

பரத நாட்டியக் கலை தமிழ் நாட்டின் தொன்மையான கலையாகும். இதனுடைய முத்திரைகள் சிலவற்றை 'ரஷ்யன் பாலே' நடனங்களில் புகுத்தி இருப்பதாகத்தெரிகிறது என்ற பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நிதி அமைச்சர் திரு. எம் பக்தவத்சலம் குறிப்பிட்டார். இவ் விழாவில் அவர் ஆற்றிய உரை வருமாறு.

பரத நாட்டியம் தமிழ் நாட்டில் முன்பு சிறந்துவிளங்கியது. இடையிலே அது ஓரளவு நசிந்து விட்டாலும் தற்போது இக்கலை புத்துயிர் பெற்று எழுவது பெருமைப் படத்தக்கது. எல்லோரும் "பரதம்" கற்றுக் கொடுக்க முனைந்திருக்கிறார்கள்.

#### பெண் பார்க்கும்போது...

பெண் பார்க்கப் போகும் போது முன்பு பெண் என்ன படித்திருக்கிறாள், பாடத் தெரியுமோ என்றெல்லாம் கேட்பது வழக்கமாக இருந்தது. ஆனால் தற்போது "பெண்ணிற்கு பரத நாட்டியம்" தெரியுமா? என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் நிலைக்கு பரத நாட்டியத்தை உயர்வான கலையாக மதிக்கின்றனர்.

#### தஞ்சை கோயிலிலே

தஞ்சாவூர் பெரிய கோயிலிலே நிழல் பாட கோபுரத்தின் உள்ளே சென்று நான் பார்த்தபோது அந்த நாட்களிலேயே பரத நாட்டிய முத்திரைகளை கற்களில் வெட்டியிருப்பது தெரிந்தது. 108-ல் 98 கற்கள்தான் அங்கு இருந்தன. பாக்கி முற்றுப் பெறுமல் இருந்தன. அந்த முத்திரைகள் "ரஷ்யன் பாலே" நடனங்களில் இங்கிருந்து எடுத்துச் சென்று இணைத்திருப்பதாக கூறுப்படுகிறது. எனவே தொன்மையான நமது இக்கலையை அனைவரும் வளர்ப்பதில் ஆர்வம் காட்டவேண்டும்.

## ராக் அன்ட் ரோல் ஆபாசமையா

### என்கிறார் நாகையா

நமது சினிமாக்களில் இப்பொழுது மேல்நாட்டிலிருந்து வாங்கப்பட்ட ஒரு நடனம் ராக் அண்ட் ரோல் "ஐயோ இதற்குப் பெயர் நடனம் என்று சொல்லாமா... ஆபாசம்" என்கிறார். பிரபல நாடிகர் நாகையா.

"பரத நாட்டியக்கலை மிகுந்த இலக்கண ரீதியான கலை, அலாரிப்பு, சப்தம், வர்ணம்' இதற்கான தாள, ராகங்கள் போதிய இலக்கண அமைப்புக்கள் அபாசமின்றி கலை நுணுக்கத்தைக் காட்டுகிற செயல்கள் தாம் உண்டு எனலாம். தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே வளர்ந்து, தமிழர்களின் தனிச் சொத்தாக இருக்கும் பரத நாட்டியமே சிறந்த கலை. நான் தெய்வ நம்பிக்கை உள்ள வனுகையால் இதை ஒரு தெய்வீகக் கலையாகக் கருதுகிறேன் என்று மேலும் தெரிவித்துள்ளார் நாகையா.

—

### ராதாவின் கூத்து!

நடிகர் பி. எஸ். வீரப்பாவின் பி. எஸ். வி. பிக்சர்ஸார்ஸ் தயாரித்துவரும் "ஆலயமணி" யில் நடிகவேள் ராதா நடிக்கும் "சத்தியவான் சாவித்திரி" தெருக்கூத்தைக் காணலாம்.

## பூஜ்யம் தபால்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பலரது பிரார்த்தனை. தாங்கள் இம்முறை இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கி இருக்கக் கூடுமென்று கேள்விப்பட்டேன். அப்படியாயின், மலை நாட்டுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் தாங்கள் வரவேண்டுமென்று இப்போதே கூறிவைக்கிறேன். மனமுடைந்து லட்சக்கணக்கான மக்கள் இப்பகுதியிலுள்ளனர். தங்களைக் கண்டால் அவர்களுக்குப்பெரும் ஆறுதலாகவும் புது நம்பிக்கையளிப்பதாகவுமிருக்கும்.

பவுர்ணை.

### ஈழப்பாட்டனின் கடிதங்கள்

**தவிர்க்க முடியாத காரணத்தால்பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் எழுதும் ஈழப் பாட்டனின் கடிதம் இவ்வாரம் வெளியிடமுடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

### தயாரிப்பாளர் கோபாலகிருஷ்ணன்

'சாரதா' படத்தின் மூலம் டைரகடராக அறிமுகம் செய்யப்பட்ட கதை, வசனகர்த்தா கே. எஸ். கோபாலகிருஷ்ணன் சித்ரா புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் ஒரு புதிய திரைப்படக் கம்பெனியைத் துவக்கியுள்ளார்.

தானே கதை, வசனம் அமைத்து டைரக்ட் செய்யப்போகும் இப்படத்திற்கான இசையை கே. வி. மகாதேவன் அமைப்பார்.

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரியுடன் மற்றும் பலர் நடிகர் பட்டியலில் இடம் பெறுவார்களெனத் தெரிகிறது.

—

### ஆசை அலைகள்

அன்பு பிலிம்ஸ் "ஆசை அலைகள்" என்ற படத்தை தயாரிக்கிறார்கள். இப்படத்தில் ராஜேந்திரன், விஜயகுமாரி, ராதா, ராமராவ், ஜெமினி சந்திரா ஆகியோர் நடிக்கின்றனர். கண்ணதாசன் பாடல்களை எழுத கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார். ஏ. எஸ். ஏ. சாமி இப்படத்தின் டைரக்டராவார்.

### டைரக்டர் பாலச்சந்தர் குழந்தைகள் படம் தயாரிக்கிறார்!

பிரபல திரைப்பட நடிகரும், டைரக்டருமான எஸ். பாலச்சந்தர் "பாலச்சந்தர் கிரியேஷன்ஸ்" என்ற பெயரில் ஒரு திரைப்படக் கம்பெனியைத் துவக்கியுள்ளார்.

இதன் முதல் தயாரிப்பாக குழந்தைகள் படமொன்றை அவர் தயாரிப்பார்.

கதை, இசை அமைப்பு, டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை அவரே ஏற்கும் இப்படம் சுமார் இரண்டே மாதத்தில் தயாரிக்கப்படும்.

### பெரிய நடிகர் யார்?

#### ஜெமினி விளக்கம்

அதிகமாகப் பணம்பெறுவது தான் பெரிய நடிகருக்கான அத்தாட்சி என்ற ஒரு நிலை சினிமாவில் ஏற்பட்டுள்ளது. நம் சினிமாத்தொழில் உள்ள நிலையில் நடிகர்களின் நடிப்பதற்கான பணத்தொகை 'மடமட'வென உயர்ந்துபோவது தொழிலுக்குப் பல வழிகளில் கெடுதலாகும். யாராவது ஒருவர் வலியத் தொகையைக் குறைத்துக்கொண்டால் "பார் பார் அவனுக்கு மார்க்கெட் இல்லை. அதனால்தான் இறங்கி வருகிறான்" என்று கூற ஆரம்பித்துவிடுவார்கள்.

எல்லோருமாகச் சேர்ந்து இது குறித்து ஒரு முடிவு எடுப்பதே இதற்குப் பரிகாரம்-தொழில் வளரவும் நல்லது என்று திரு ஜெமினி கணேசன் கருத்துத் தெரிவித்தார்.

### மேக்கப் இன்றி நடிக்கிறார் தேவி

கங்கா புரொடக்ஷன்சார் மெஜஸ்டிக்கில் தயாரித்து வரும் தங்கமலர் படத்தில் தான் சரோஜாதேவி ஒரு முக்கிய காட்சியில் இவ்விதம் மேக்கப் இன்றி நடிக்கிறார்.

ஜெமினி, எம். ஆர். ராதா ஜி. வரலக்ஷ்மி, ராமராவ், மனோரமா ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு இன்னும் 2 மாதங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கதை வசனத்தை வே. லட்சுமணன் எழுத, பாடல்களைக் கண்ணதாசனும், இசையை டி. ஜி. லிங்கப்பாவும் ஏற்றுள்ளனர். டி. எஸ். ராஜகோபால் டைரக்ட் செய்கிறார்.

### 'சரியா? தப்பா?' நாடகம்

#### மேதினவிருந்து

யாழ்ப்பாணம், சனி

மே தினத்தை முன்னிட்டு வண்ணை கலைவாணர் நாடக மன்றம் மே 1-ம் திகதியன்று இரவு "சரியா? தப்பா?" என்ற சமூகநாடகத்தை அரங்கேற்றுகின்றது. யாழ்ப்பாணம் மனோகரா படமாளிகையில் நடைபெறவிருக்கும் இந்நாடகத்திற்கு திரு. ஏ. எஸ். மணி தலைமை வகிக்கிறார்.

# மகளிர் மன்றம்

## "நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்"

எவ்வளவு கல்வி கற்றாலும், அதனால் உயர்ந்தநிலை அடைந்தாலும் பெண்களுக்கென்றே உரிய கடமையொன்றிருக்கிறது. மனையறம் பெண்களுக்குத் தலையாய அறமாகும். சமுதாய வாழ்க்கையில் காலத்துக்குக் காலம் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டு வந்துள்ள போதும் மக்கட்பேறும் குடும்ப பராமரிப்பும் பெண்களின் பிரதான கடமையாக இருந்து வருகிறது.

''ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்று தாய்க் குலத்தின் முழுமுதற் கடமையாகக் குழந்தைகளைப் பெற்று. வளர்த்து வெளியே அனுப்புவதைப் புலவர் பொன்முடியார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பாடியுள்ளார். (புறம்-312) விண்வெளிப் பயணம் தொடங்கப்பட்டுள்ள இன்றும் அந்நிலை மாறிவிடவில்லை. பெண்கள் கல்வி கற்று மக்களுக்குப் பணியாற்றும் முறையில் பற்பல அலுவல்களை மேற்கொண்டு பொருளீட்டிக் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக்கொள்கின்றனர் என்பது உண்மைதான். ஆயினும் இன்றும் 'ஈன்று புறந்தருதல்' மகளிர் கடன்தானே? மறுக்க முடியுமா? ஆனால் ஒரு மாறுதல். பெண்ணுலகு தனது முதற் கடமையை மறக்காமல் மாற்றுமல், கல்வி பயின்று, அறம் பல கற்றுநாட்டிற்கு எந்த அளவுக்குப் பணியாற்ற முடியுமோ அந்த அளவுக்குப் பொதுப் பணியையும் மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிடுதல் மிகையாகாது.

எவ்வளவு உயர்ந்தநிலையை அவர்கள் எட்டிப் பிடித்த போதும் 'மனையறம்' அவர்களுடைய தலையாய அறமாகவே திகழும். பெண்கள் குடும்ப வாழ்க்கையை இன்பமாக நடத்த மேலும் துணைபுரிவதற்காகத்தான் கல்லூரிகளில் இன்று 'மனையியல்' கற்றுக் கொடுக்கப் படுகிறது. மனையியலில் குடும்ப நிருவாகம், வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு, சமையற்கலை, அழகுக்கலை முதலிய பல பிரிவுகள் உண்டு. இதை உணர்ந்துதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்று கூறினர். அவருடைய 'குடும்ப விளக்கு' என்னும் கவிதைத் தொடர் மனையறம் நடத்தும் யாவரும் படித்துச் சுவைக்க வேண்டிய ஒன்று.

இல்லறம் இன்பமயமாக இருக்க வேண்டுமானல் கணவனும் மனைவியும் ஒன்றுபட்ட மனத்தினராக இருத்தல்வேண்டும். இல்லற வாழ்க்கையின் ஓட்டத்தில் சில சமயங்களில் சுழற்சியும், அதிர்ச்சியும் மனக்கசப்பும் வந்து விடுவதுண்டு. அவை முற்றி மிகச் சில சமயங்களில் பெரும் பிளவு ஏற்படுவதும் உண்டு. ஆயினும் அவற்றிற்கு அடிப்படையான காரணம் அற்பமானதாகவே இருந்திருப்பதாக ஆண்-பெண் உறவைப் பற்றி ஆராய்ந்த பெரியோர் கூறுகின்றனர்.

எல்லாப்பெண்களும் மிக்க அழகுள்ளவர்களாக இருப்பதில்லை. ஆனல் ஒவ்வொரு பெண்ணும் தன்னை அழகுபடுத்திக் கொள்ளமுடியும். எந்தக் கணவனும் தன் மனைவி அழகாக இருப்பதையே விரும்புவான். சில பெண்களுக்கு அவிழ்ந்த கூந்தலும் அழகாக இருக்கும் - எந்தப்புடவையுமே எடுப்பாக இருக்கும். எல்லோருக்குமே அப்படியிருக்கமுடியாது ... இங்குதான் அழகுக் கலையின் துணை அவசியப்படுகிறது. இன்ன நிறத்தையுடையவளுக்கு இன்ன நிறத்தில் சேலைகட்டினல், இன்ன இன்ன நிறத்திலுள்ள சட்டைகள் எடுப்பாக இருக்கும் . . . வட்ட முகத்தையுடைய ஒரு பெண்ணுக்குப் பொருந்தும் ஒரு வகைக் காதணி, நீண்ட ஒடுங்கிய வதன முடையவளுக்குப் பொருந்தாது அவளுக்கு எது எடுப்பாக இருக்குமோ அதை அணிந்து கொள்ளவேண்டும். அழகுக் கலையை ஆடம்பரத்துக்காகவன்றி, தன் அன்புக்குரிய கணவனின் அழகுச் சுவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதில் தவறு கிடையாது; மாருக மிகமிக அவசியமானது.

மணவாழ்க்கை இன்புற உங்கள் கணவர்களும் குழந்தைகளும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கும்படி செய்யுங்கள். தையல் வேலை, துணிகளைத் துவைத்து சுருக்குப் போக்குதல், துணிகளில் ஏற்பட்டுள்ள கறைகளைப் போக்கும் முறைகளைக் கையாளல், சுவையான உணவு சமைத்தல், குடும்பத்தினரின் உடைகள் மீது முன் கூட்டியே கவனம் செலுத்துதல் முதலியவை மனையியலின் முக்கியமான அம்சங்கள்.

## ஊறுகாய் வகைகள்- (2)

### தயாரிக்கும் முறை

**3 இஞ்சி ஊறுகாய்**

தேவையான பொருள்கள்:

புளி எலுமிச்சம்பழ அளவு
உப்பு கால் ஆழாக்கு
நல்லெண்ணெய் 2 பலம்
மஞ்சள் பொடி 1 கரண்டி
கடுகு, பெருங்காயம் சிறிதளவு
இஞ்சி 5 பலம்

செய்முறை: முற்றாத குருத்து இஞ்சியாக இருப்பது நல்லது. முதலில் இஞ்சியைச் சுத்தமாகக் கழுவி எடுத்து மேல் தோலை சீவிவிட்டு சிறுதுண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும். ஒரு டம்ளர் தண்ணீரில் புளியை நன்ருகக் கரைந்து சாற்றை எடுத்துக்கொண்டு சக்கையை எறிந்துவிடவும். இதிலேயே உப்பையும் மஞ்சள் பொடியையும் கலந்துகொள்ளவும்.

வாணலியில் நான்கு கரண்டி எண்ணெய்விட்டு கடுகு பெருங்காயத்தைத் தாளித்துக்கொண்டு நறுக்கி வைத்திருக்கும் இஞ்சித் துண்டுகளைப் போட்டு சற்றுநேரம் புரட்டவும். பின்பு புளிக் கரைசலையும் ஊற்றி அடுப்பை லேசாக எரியவிட்டு அரை மணி நேரம் கொதிக்கவிடவும். கடைசியாக மீதமுள்ள எண்ணெயையும் கலந்து கிளறி இறக்கிவிடலாம். ஆறியபின் ஜாடிகளில் எடுத்து வைக்கவும்.

**4 மிளகு ஊறுகாய்**

தேவையான பொருள்கள்:

பச்சை மிளகு 1 ஆழாக்கு
உப்பு கால் ஆழாக்கு
எலுமிச்சம்பழம் 4
மஞ்சள்பொடி 1 கரண்டி

செய் முறை: ஒரு டம்ளர் கொதி நீரில் உப்பையும், மஞ்சள் பொடியையும் போட்டுக் கரைத்துக்கொண்டு ஆறிய பின்பு பச்சை மிளகை சுத்தமாகக் கழுவி இத்துடன் சேர்க்கவும்.

எலுமிச்சம்பழத்தை சாறு பிழிந்து எடுத்துக்கொண்டு கொட்டைகளை நீக்கி ரசத்தை மட்டும் இத்துடன் கலந்து கொள்ளவும். ஜாடியில்போட்டு மூடி வைத்து மூன்று தினங்கள் ஊறியபின் உபயோகிக்கலாம்.

வாசனைக்குச் சிறிதளவு பெருங்காயத்தை பொரித்துப் பொடிசெய்து சேர்த்துக்கொள்ளலாம். சிலர் பச்சை மிளகாயை நறுக்கிப்போடுவதும் உண்டு. மிளகுக்கேகாரமுண்டு. ஆகையால் இது அவசியமில்லை.

## அழகு மேடை

'ஐரின் ரஞ்சிதம்'

### ஆடை அலங்காரம்

பெண்கள் தங்கள் அழகை மேலும் மிகைப்படுத்துவதற்கு ஆடை அணிகளை வெகு கவனமாக தேர்ந்தெடுத்து அணிகிறார்கள். உண்மையில் ஆடை அணிகலன் பெண்களின் அழகுக்கு அழகு கொடுப்பனவாகவே உள்ளன. அவற்றை அணிவதில் தான் எத்தனை புதுமை.

பெண்கள் தங்கள் அலங்காரத்திலே பொழுதை மிகுதியாகச் செலவிடுகின்றார்கள் என்பது எல்லோரதும் அபிப்பிராயம். உண்மையும் கூட. பிறர் தங்களைப் பார்த்து பின்பற்றும்படி நாகரிகமாக உடை உடுத்தவேண்டுமென்று விரும்பாத பெண்கள் மிகச் சிலரே கண்டகண்ட புடவைகளைக்கண்டகண்டபடி உடுத்திக் கொண்டுசெல்வதிலும்பார்க்கக் காலம் நேரத்திற்கும் இடத்துக்கும் பொருத்தமான உடைகளை அணிவதே நல்லது.

மெலிந்த தோற்றம் உடையவர்களும் சிவந்த நிறமுடையவர்களும் பொதுவாக எப்படியான உடைகளை உடுத்தினலும் பொருத்தமாக இருக்கும். சிவப்பாக உள்ளவர்கள் கடும் நிறங்களில் புடவை உடுத்தினல் எடுப்பாக இருக்கும். சற்று நிறம் குறைந்தவர்கள் கடும் நிறங்களில் புடவை உடுத்துவது அவ்வளவு எடுப்பாக இருக்காது. மெல்லிய நிறங்களே அவர்களுக்கு உகந்தது. அதற்காக அவர்கள் கடும் நிறத்தில் அணியக்கூடாதென்பதற்கில்லை.

கட்டையானவர்களும் பருமனவர்களும் மிக மெல்லிய புடவைகள் உடுத்துவது நன்ருக இருக்காது. மிகவும் தடித்த புடவைகள் உடுத்தினல் இன்னும் பருமனகத் தோன்றும். கட்டையும் பருமனுமானவர்கள் அகலம் குறைந்த புடவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில் கொய்யகம் செருகும் போது நிறையச்செருகவேண்டி வரும். அகலம் குறைந்த புடவைகளானல் கொய்யகம் சிறிதாகச் செருகலாம். கட்டையானவர்களுக்கு அகலபார்டர் உள்ள புடவைகளும் குறுக்குக் கோடுகள் உள்ள புடவைகளும் பொருந்தாது. அவர்களை மேலும் கட்டையாக தோற்றுவிக்கும். நீள்வளமான கோடுகள் உள்ள புடவைகளானல் சற்று உயரமாகத் தோன்றும்.

புடவை விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுப்பவர்கள் சோளி விஷயத்திலும் சிறிது கவனம் எடுத்தல் மிக அவசியம். புடவை புள்ளிகளோ, டிசைன்களோ அற்றதாக விருந்தால் புடவையின் நிறத்தில் டிசைன்போட்ட சோளிகளை அணிவது பொருந்தும். மெல்லிய நிறப்புடவைக்கு அதே கடும்நிறத்திலும் சோளிபோடலாம். அதே கலர் புள்ளிகள், பூக்கள் கொண்ட சோளியும் போடலாம். அதே போலக் கடும் நிறச் சேலைக்கு அதே மெல்லிய நிறப் பூக்கள் கொண்ட சோளி போடலாம். 'பார்டர்' போடப்பட்டபுடவையாக விருந்தால் பார்டர் நிறத்தில் சோளி அணியலாம். பூப் போட்ட புடவையாக இருந்தால் பூக்களிலுள்ள பிடித்தமான நிறங்களில் ஒன்றைத் தெரிந்து அதே நிறத்தில் டிசைன்கள் எதுவுமிடப்படாத சோளி போடலாம். சோளிகளை அளவுக்குப் பெரிதாக தைத்துப் பாவிப்பது அழகாக இருக்கமாட்டாது. சற்றுப் பிடிப்பாக உடம்போடு ஒட்டினற்போல அழகாக இருக்கவேண்டும்.

புடவையின் நிறத்துக்குப் பொருந்த சோளி அணியும் போது புடவை நிறத்திலேயே தலையில் பூவும் வைத்துக் கொண்டால் மிகவும் கவர்ச்சியாகத் தோன்றும். கனகாம்பர நிறப் புடவைக்கு கனகாம்பரப்பூவும் ரோஜா நிறப் புடவைக்கு ரோஜாப்பூவும் வைப்பது மிகவும் அழகாய் இருக்கும். இல்லாவிடில் எல்லாவற்றிற்கும் பொதுவாக வெள்ளைப்பூ, முக்கியமாக மல்லிகைப்பூ வைத்துக்கொள்ளலாம்.

புடவை சோளி விஷயத்தில் காட்டும் சிரத்தையை உள்ளாடைகள் விஷயத்திலும் சற்றுக் காட்டினல் நல்லது. புடவை மெல்லியதாக இருந்தால் புடவை நிறத்திலே உள்ளாடைகள் அணிவது நல்லது. நைலோன் துணியில் ஆடை அணிப்பவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும். பொதுவாக நைலோன் ஆடை அணிகள் அழகுதருவதில்லை. வெறும் கேலிக்கூத்துக்கு இடமளிப்பவையே அவை. நாகரிக நாரீமணிகள் சிலர் நைலோன் நைலோன் என்று பிரியப்படுகிறார்கள். ஆனல் நைலோனில் ஒருவிதமான அழகும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜார்ஜெட் புடவைகள், வாயில் புடவைகள் மற்றும் பருத்திப் புடவைகளே குடும்பப்பெண்கள் அநேகமாக விரும்பத்தக்கவை. வெளியிடங்கள் கோயில் முதலிய இடங்களுக்குச் செல்வதாயின் இளம் பெண்கள் காஞ்சீபுரம், காஷ்மீர் முதலிய புடவைகளும், விலைஉயர்ந்த பருத்திப்புடவைகளுமே விரும்பி அணிவார்கள். கலியாண வைபவங்கள் முதலியனவற்றிற்குச் செல்வதானல் மைசூர், மணிப்புரி, காஞ்சீபுரம், பெங்களூர் முதலிய திறம் பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்கிருர்கள்.

இப்படியாகஇடத்துக்கேற்றவாறும், தமது தோற்றங்களுக்கு ஏற்றவாறும் உடைகளை அணிந்துகொண்டு ஏனைய அலங்காரங்களையும் சீராகச் செய்துகொண்டு செல்லும் பெண்கள் மற்றவர்கள் நன்மதிப்பைப் பெறுவர் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.



# நாடு நலம் பெற ...

# மண்ணை வளமாக்கும் வழி முறைகள்

## கழிவுப் பொருளிலிருந்து கூட்டுப் பசளை தயாரித்தல்

**இக்கோடை காலத்தில் பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் வேலைகளைத் தொடங்கிவிடுவார்கள். விவசாயவேலை தொடங்குமுன் ஒவ்வொரு விவசாயியும் தத்தம் நிலங்களின் தன்மையைப் பற்றித் தெரிந்துகொண்டு அதற்கேற்ற பயிரைப் பருவந்தவருமல் விதைத்து உற்பத்தியைப் பெருக்கிப் பெரும்பயன் அடையவேண்டும். கழிவுப் பொருள்களிலிருந்து உரப்பசளைகளைத் தயாரிப்பதையும் இதன் மூலம் நிலத்தைப் பண்படுத்துவதையும் தெரிந்திருத்தல் அவசியம்.**

வேளாண்மையில் முதல் தேவை நல்ல மண்ணுள்ள நிலம். அந்த நிலத்தை நாம் எப்படிப் பக்குவப்படுத்திப் பயிர் செய்கிறோமோ அதற்கேற்ற விளைவுதான் இருக்கும். எனவே விவசாய வல்லுனர்கள் மண்ணின் தன்மைகளைப் பற்றியும் அதில் பயிர் செய்யும் முறைகளைப் பற்றியும் ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

### மண் பல்வேறு விதம்

நிலத்தைச் செவ்வல் நிலம், கரிசல் நிலம், அடைமண்நிலம், செம்புறைநிலம், மணல் பாங்கான நிலம் என்றெல்லாம்மண்ணின் தன்மைக்கேற்றபடி பலதரமாக வகுத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு பாங்குள்ள நிலத்திற்கும் உரம் இடும் அளவும் வகையும் வேறுபடும். உழவும் நிலத்திற்கேற்ப கூடுதலாகவோ குறைவாகவோ தேவைப்படும். உதாரணமாக: செவ்வல் மண் நிலத்தில் உழுவது சுலபம். தண்ணீரை இம்மண் எளிதில் உறிஞ்சிக்கொள்ளும் சக்தியுடையதால் அதிகமாக உழுவதும் தேவை இல்லை. தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்வதிலும் அது சிறந்தது. ஆனால் மணல் பாங்கான நிலம் தண்ணீரை நீண்டநாள் வைத்திருக்கமாட்டாது. ஆகவே அதில் சில பயிர்களை விவசாயம் செய்வது அதிக லாபம் தராது. சில நிலங்களில் தாவரங்களுக்கு வேண்டிய இயந்திர உப்புகள் அதிகம் இருக்கும். சில நிலங்களில் மேல் பரப்பில் உள்ள உப்புச் சத்துக்கள் எல்லாம் காற்றாலும் மழையாலும் கரைந்து போய் மண் வளமற்று இருக்கும். செழிப்புக்குறைந்த நிலங்களில் தழை உரப் பயிர்களைப் பயிரிட்டு மடக்கி உழுவதால் நிலத்தின் வளம் அதிகரிக்கும். அல்லது மண்ணைப் பரிசோதனை செய்து செயற்கை உரங்களை வைத்தும் பயிரிடப் பயன்படுத்தலாம். மண்ணின் தரமும், செழிப்பும் தெரிந்துகொண்டு பயிரிடுவதில் உள்ள லாபங்கள் அதிகம். எனவே சித்திரையில் (ஏப்ரல்) விவசாய வேலை தொடங்க இருப்பவர்கள் எல்லோரும் இதில் கருத்துச் செலுத்தவேண்டும் என்பதற்காக இங்கு குறிப்பாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

### கழிவுப்பொருள்களிலிருந்து கம்போஸ்ட்

வேளாண்மை நிலத்திற்கு ஊட்டம் அளிக்கப் பசுந்தழை உரங்களைச் சேர்ப்பது சிறந்த முறை. கழிவுப்பொருள்களிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரித்துப்போட்டும் தொழுஉரம் முதலானவற்றைக் கொட்டியும் நிலத்தை வளப்படுத்தலாம்.

முந்திய மாதங்களில் அறுவடையான கரும்பின் தக்கைகளை வீணடிக்காமல் கம்போஸ்ட் உரம் தயாரிக்க ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தயாரிக்கப் பெற்ற கழிவு உரம் தொழு உரத்தை விடச்சிறந்த தன்மைகளையுடையதாகவும் காண்கிறது. அதைக் கரும்புப் பயிருக்கே கூடப் பயன் படுத்தலாம்.

ஆறடிக்கு நான்கடி அகலம் உயரமுள்ள குழிகளில் கரும்புத் தக்கைகளையும், கொழுத்தாடுகளையும், நிரப்பி வைக்க வேண்டும். வெயிலிலும், மழையிலும் வரும் அக்குவியலை அடிக்கடி புரட்டிக் கொடுக்கவேண்டும். பருவ மழையில் ஊறின கழிவைக் கம்போஸ்ட் உரமாக வயலில் உழவுக்கு முன்பும் பிறகு நடவுக்கு முன்பும் ஏர்க்காலிலும் இட்டால் விளைவு நன்றாக இருக்கும்.

கரும்புத் தக்கையிலிருந்து கம்போஸ்ட் தயாரிப்பதுபோல் நெல்உமியிலிருந்து கம்போஸ்ட் தயாரிக்கலாம். இந்தக் கம்போஸ்டும் தொழு எரு கம்போஸ்டைப் போல மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது ஆனால் இதைத் தயாரிக்கும் முறை வேறானதாகும்.

மாட்டுத் தொழுவத்தில் மாடு படுக்கும் இடத்தில் ஒரு அடி உயரத்திறகு உமியைப் பரப்பவேண்டும் இந்த உமியின் மேல் மாடு படுக்கும் போது குத்தாமலிருக்கும் பொருட்டு குப்பைக் கூளங்களைப் பரப்பி மெத்தெனவிரித்து விடவேண்டும். இப்படிப் பரப்பப்பட்ட உமியின்.மீது பத்துப் பதினைந்து தினங்களுக்கு மாடுகளைப் படுக்கவிட்டு உமிக்குவியலைப் புரட்டிவிட வேண்டும். இரண்டுமாதகாலம் இப்படி மாடுகளைப் படுக்க வைத்தால் உமியானது மாடுகளின்சாணத்திலும், சலத்திலும் ஊறி மென்மை அடைந்து விடும் ஊறிய உமியைக் குழிகளில் இட்டுக் கம்போஸ்ட் தயாரிக்க வேண்டும்.

### தேங்காய் உரி மட்டை

தேங்காய் உரித்த மட்டைகளைக் கயிறு செய்யப் பயன்படுத்தப் படாத இடங்களில் நெருப்பு எரிக்கின்றார்கள். இவ்வாறு எரிக்காது தென்னந் தோப்பிலேயே புதைத்தால், தென்னை மரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான பொட்டாசியம் (Potassium) கிடைக்கிறதெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. மழையில் நனையாத மட்டையில் Potassium சத்து அதிகமிருக்கின்றது. மேலும் மட்டைகள் நனைவதால், மட்டைகள் புதைக்கப்பட்ட மண்ணில் தண்ணீர் தேங்கி நிற்க முடியும். மழை ஆரம்பிக்கும் காலத்திற்குச் சற்று முன்பு, மரத்துக்கு மரம் உள்ள இடைவெளிகளில் 6' அடி அகலம் 10' அடி ஆழமுள்ள. குழி தோண்டி அதில் மட்டைகளைப் புதைத்துவிடவேண்டும். இவ்வாறு புதைக்கப்பட்ட மட்டைகள் தென்னையின் வளர்ச்சிக்குப் பல ஆண்டுகளுக்கு வேண்டிய ஊட்டத்தை அளிக்கும்.

# தென்னைச் சாகுபடிக்கு தேவையான நெற்று

**இலங்கையில் தென்னைச் செய்கை அநேகமாக எல்லா இடங்களிலும் உண்டு. குறைந்தது வீட்டுக்கு இரண்டு தென்னைமரமாவது உண்டாக்கியிருப்பார்கள். இராச பயிர் என்று பெயர் பெற்றது. இதன் பிரயோசனங்கள் நமது நாட்டிற்கு பெருவருவாயைப் பெற்றுத்தரும் ஓர் ஏற்றுமதிப் பொருளாகும். தென்னைச் சாகுபடியில் ஈடுபடுவோர் சிறந்த நெற்றுக்களைப் பொறுக்கியெடுத்து நாற்று மேடைகள் போடவேண்டும். நல்ல நெற்றுத்தான் நல்ல மரத்தை வளர்க்கப் பயன்படும்.**

நல்ல மரத்திலிருந்து எடுத்த நெற்றுத்தான் நல்ல மரத்தை வளர்க்கப் பயன்படும் தாய்மரம் நல்ல காய்ப்புள்ள ஆரோக்கியமான நடு வயதுள்ள மரமாக இருக்க வேண்டும். மழைக்கால் பாசனமுள்ள தோட்டங்களில் வளரும் மரங்களிலிருந்து தென்னை நெற்றுக்களை விதைக்குச் சேகரிப்பது நல்லது.

### நல்ல மரத்துக்கான லட்சணங்கள்

(1) முறையாகவும், நிரம்பவும் காய்க்கும் மரமாக இருக்க வேண்டும். கிட்டத்தட்ட ஆண்டுக்கு 100 காய்களாவது காய்க்க வேண்டும். 80 க்குக் குறையக் கூடாது. இரண்டு வருடக் காய்ப்பை எண்ணிப் பார்த்தால் மரத்தின் காய்ப்புத்திறன் என்னவென்று தெரியும். மேலும் நல்ல காய்ப்புள்ள மரத்தில் நன்கு விரிந்த 30 மட்டைகளாவது இருக்கும். சாதாரணமாக நிரம்பக் காய்கள் கட்டிய, நிரம்ப மட்டைகள் உள்ள மரம் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

(2) மட்டைகளின் லட்சணங்களையும் கவனிக்க வேண்டும். நல்ல மரத்தின் மட்டை மரத்தில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். அடி அகலமாக இருக்கும். மட்டை கெட்டியாகவும், குட்டையாகவும் இருககும். காய்க்கும் காய்களை தாங்கிக் கொள்ளக் கூடியவாகில் மட்டைகள் வளர்ந்திருக்கும்.

(3) நல்ல மரத்தின் ஒவ்வொரு கட்கத்திலும் பூக்கட்டும் பூக்களுள் பெண் இனப் பூக்கள் அதிகம் இருக்கும். எந்தச் சமயத்தில் பார்த்தாலும் மரத்தில் ஒவ்வொரு பருவ பக்குவமுள்ள 12 குலைகளாவது குறைந்த பட்சம் இருக்க வேண்டும். குலையின் காம்பு சிறியதாய், கெட்டியாய், நீளமாக இருக்கக் கூடாது. குலைகள் குவிந்தோ தொங்கலாகவோ இருக்கவும் கூடாது.

(4) தாய்மரம் காய்க்கும் காய்களின் உருவங்களும், பரிமாணமும் எப்படி இருக்கின்றன என்றும் கவனிக்க வேண்டும். உருண்டை அல்லது நீண்ட வடிவமுள்ள நடுத்தரப் பரிமாணமுள்ள காய்கள் காய்க்கும் காய்களினின்று விதை நெற்றைப் பொறுக்கவும். அத்தகைய மரங்களின் வித்துக்களிலிருந்து முளை விரைவில் கிளம்புவதுடன் அடர்த்தியான பருப்புள்ள காய்கள் நிரம்பக் காய்க்கின்றன. மிகப் பெரிய காய்கள் காய்க்கும் மரங்களிலிருந்தும், மிகச் சிறிய காய்கள் காய்க்கும் மரங்களையும் நீண்டு குறுகிய காய்கள் காய்க்கும் மரங்களையும் நெற்று விதை எடுக்கத் தேர்ந்தெடுக்கக் கூடாது. கொப்பரையாக இல்லாமல் தேங்காயாகவே உரித்து விற்க வேண்டும் என்ற கருத்துடன் பயிர் செய்தால் பெரிய உருவமுள்ள காய்களை ஈனும் பெரிய நெற்றுகளைப் பொறுக்கவும். எல்லா நல்லகுணங்களும் உள்ள மரங்களைப் பொறுக்கியெடுக்க முடியாது போனல் மேற்சொன்ன லட்சணங்களில் பல குணங்களை உள்ள மரங்களைத் தேர்ந்தெடுக்கவும். குற்றம் குறை இல்லாமல் நிரம்பக் காய்க்கும் மரமா என்று மட்டும் கவனிக்கவும்.

பருப்பு நன்றாக வைக்காத மரங்களை ஒதுக்கி விடவும். அதிக குரும்பை உதிர்க்கும் மரங்களை ஒதுக்கி விடவும். வீடுகள், கொட்டில்கள், மக்கியாரக்குழிகள், நீர்த்தரைகள் இவைகளின் அருகிலுள்ள மரங்களிலிருந்து நெற்றுக்களைப் பொறுக்கினல் மரம் சுபாவமாகவே நல்ல மரமாக அல்லது நல்ல சூழ்நிலையால் நல்ல காய்ப்புள்ளதாய், இருக்கிறதா என்று கண்டறிவது கடினம்.

### மாமரப் பாதுகாப்பு

இக் காலம் மாமரம் காய்க்கும் காலமாகும். காய்ப்பு மரங்களுக்கு இலங்கையில் பெரும் பாகங்களில் எருப் போடுவதில்லை. ஆனல், ஆண்டு தோறும் எருப் போடுவதால் காய்ப்பு அதிகரிக்குமென்பதை அனுபவத்திலிருந்து அறியப்பட்டிருக்கின்றது.

மழைக்கால ஆரம்பத்தில் மாந்தோப்புகளில் ஏக்கருக்கு பத்து வண்டிகள் வீதம் தொழு எருவை மேலாக அடிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு மரத்திற்கும் காய்க் காலத்தில் தனித்தனியாக உரம் ஊட்டுவது சிறந்ததாகும். 10 முதல் 20 வயதுடைய மரத்திற்கு 100 றுத்தல் தொழு எருவும், 15றுத்தல் எலும்புத் தூளும், 30 இருத்தல் சாம்பரும் தேவைப்படும். வயது அதிகமான மரங்களுக்குப் பருமன் விகிதாசாரபபடி அதிக எரு இட வேண்டும். தனித்தனியாக இடும் எருவை 2 அடி அல்லது 3 அடி அகலம் 1 அடி ஆழமுள்ள குழியில் போட வேண்டும். இலை பழுத்துக் காய்ப்புக் குன்றிப் புது வளர்ச்சி மங்கி பெலனற்ற மரங்களுக்கு அமோனியம் சல்பேட் (Amumonium Sulphate) போட்டுச் சிறிது தண்ணீர் தெளிக்க வேண்டும்.

இவ் உரத்தைக் கோடை காலத்திலே தான் போட வேண்டும். மழைக் காலத்தில் போட்டால், உரம் எளிதில் மழை நீரில் கரைந்து மரவேர்களுக்கு எட்டாத இடங்களுக்குச் சென்று விடும்.

### வாழைத்தார்களுக்கு வெயில் பாதுகாப்பு

இவ்வாண்டு சித்திரைமாதம் கடுமையான வெயில் காலம். இந்த வெயில் கொடுமைதாங்க முடியாததால்வாழைத்தார்கள் காய்ந்துவீணகப்போவதுண்டு. சில முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கொண்டால் இம்மாதிரியான நஷ்டத்தைத் தடுத்து விடலாம்.

ஆரம்பகாலத்தில் தோட்டங்களில் வாழைமரங்களுக்கிடையில் வேண்டிய இடைவெளிக்கு மேல் அதிகம் விடாமல் நட வேண்டும். இலைகளின் நெருக்கம் வெப்பத்தின் பாதுகாப்பாக உதவுகிறது. வெயில் காலத்தில் காய்ந்து கருகிப் போன இலைகளை அகற்றிவிடாமல் அவைகளாகக் கீழே விழும்வரையில் விட்டுவைக்கலாம். தார்களைச் சருகுகளால் கட்டிமூடி வைக்கலாம். இந்த எச்சரிக்கைகளைக் கடும் கோடை காலத்தில் எடுத்துக் கொண்டால் நஷ்டத்தை நிச்சயம் தவிர்க்கமுடியும்.


மிகத் திறமையான

**பவர்ஸ்**

**உரங்கள்**

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

**ஏ. பவர்**

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

இன்று திருநாவுக்கரசர் குருபூசைத் தினம்

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை

## முக்கரணப் பணிபுரிந்த நாவுக்கரசர்

— க. வை. ஆ. சர்மா —

புதுமையிற் புதுமைகாண விரும்பி உழைக்கின்றது இக்கால விஞ்ஞான உலகம். பழமையிற் பழமை பேசுவதாற் பயன் என்ன என ஒரு சாரார் நினைக்கலாம். பழமையை மறந்து புதுமைகாணும் முயற்சி கண்ணைக்கட்டி நடுக்காட்டில்விட்ட நிலையொக்கும். பழமையைப் போற்றிப் புதுமை காண விரும்புவது செவ்விதான பாதைவழிவந்து துணிந்து முன்னேறுவதாகும். இது மனித வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். இக்காலம் மக்கள் வாழ்விலே மலிந்துகாணப்படும் கொலை, தற்கொலை, துராகிருதம், நாசோரம், வியபிசாரம், வழிப்பறி, களவு முதலாந் தீமைகளுக்குக் காரணம் சமய வாழ்வின் அடிப்படையான உண்மைகளை மக்கள் மறந்தமையும் அறியாதிருப்பதும் என்றே துணிந்து கூறலாம். இதனைக் கருத்திற்கொண்ட கல்வி உலகம் சமயக் கல்விக்கு முதலிடங்கொடுக்க முனைந்திருக்கிறது. சைவசமயத்தைத் தாங்கும் நான்கு தூண்களாக அமைந்தவர்களே சமயகுரவர் நால்வர் ஆவர். அவர்களுள் ஒருவரே திருநாவுக்கரசுநாயனர். சைவசமய குரவர் முத்தி அடைந்த தினங்களைக் கொண்டாடவேண்டியது சைவ மக்களது முக்கிய கடனாகும். சித்திரை மாசத்துச் சதய நட்சத்திரமாகிய இன்று (29-4-62) திருநாவுக்கரசு நாயனரது குரு பூசைத் தினமாகும். ஆகவே அவர்பெற்ற திருவருட் சிறப்புக்களை அறிந்து பாராட்டிச் சிவபிரான் திருவருளைப் பெறுவோம்.

### வாகீசரே நாவுக்கரசர்

தமிழ்நாடுசெய்த தவப்பயன் காரணமாகச் சைவச் செழும்பயிர் தழைக்கும் வண்ணம் திருக்கைலாசபதி திருவுளங்கொண்டார். சிவதொண்டர்களுள் ஒருவர் வாகீசமுனிவர். அவர் ஒருபோது எம்பிரான் திருமுன்பு சிறிது பராமுகமாக இருந்தார் எனக் குற்றம் கற்பித்த இறைவன் அதற்குக் கழுவாயாக அவரைத் தமிழ்நாட்டிற் சென்ற மனிதனைப் பிறக்கப்பணித்தார். அதனைக் கேட்டு வருந்திய வாகீசமுனிவரைத் தாமே வந்து ஆட்கொள்வதாகச் சிவபிரான் அருள்புரிந்தார். அவ்வாருகத் தமிழ்நாட்டிலே புகழனுருக்கும் மாதினியாருக்கும் புத்திரராகத் தோன்றிய வாகீசர் பெற்ருரால் முதலில் மருணீக்கியார் என அழைக்கப்பட்டார். அது பின்பு வரும் மருளை—மயக்கத்தை, இறையருளால் நீக்கவல்லவர் என்ற குறிப்புக் கொண்டதுபோலும். சமண சமயம் புகுந்தபின் அச்சமணர்களால் தருமசேனர் என அழைக்கப்பட்ட மருணீக்கியார், சூலை நோய் வந்து எவராலும் கைவிடப்பட்ட நிலையில் மீண்டுவந்து சகோதரியாகிய திலகவதியாரிடம் சரணடைந்தார். அவரால் சிவசன்னிதிக்கு அழைத்துச்செல்லப்பட்டுப் பண்டைய வினைப்பயன் வந்துகூடக் 'கூற்ருயினவாறு' என்ற முதற் பாசுரத்தைப் பாடினர். அப்போது இறையருளால் "நாவுக்கரசு" என அழைக்கப்பட்டார். அதுவே அவர் பெற்ற முதல் திருவருளாகும்.

### சிவனருளால் வந்த நெஞ்சுத்துணிவு

அரச கட்டளையை மீறவும், இயற்கைச் சக்திகளை எதிர்க்கவும் சிவ பரம்பொருளின் திருவருளை நேரே பெற்றவர்க்கல்லது வேறு எவருக்குத்தான் நெஞ்சுத்துணிவு உண்டாகும்? சமணர்களது தூண்டுதலால் பல்லவமன்னன் விடுத்த கட்டளையைமீறி "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற மறுமாற்றத் திருத்தாண்டகம் பாடி நாவேந்தர், பல்லவ மன்னனிடம் செல்ல மறுத்தார். பின்பு சமணர் சுண்ணநீற்றறையில் ஏழுநாள் இட்டுப் பூட்டிய போதும், நஞ்சூட்டிய போதும், யானையை ஏவிய போதும் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் இட்டபோதும் நாவுக்கரசர் சிறிதும் மனக்கலக்கமின்றி அவற்றை ஏற்றது திருவருள் பெற்ற துணிவேயாகும். சமணரால் நேர்ந்த துன்பமெல்லாங் கடந்த நாயனர் தாம்பெற்ற திருவருட் சிறப்போடு மீண்டு திருவதிகைக்கு வருங்காட்சியைச் சேக்கிழார் சுவாமிகள் தாம் பாடிய பெரிய புராணத்தில் படம்பிடித்துக் காட்டுவதுபோல,

"தூயவெண்ணீறு துதைந்த
பொன்மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்
தையும் நைந்துருகிப்
பாய்வதுபோலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயுமுடையார்
புகுந்தனர் வீதியுள்ளே"

என விளக்கிய தன்மை வாகீசரை எமது அகக்கண்ணுள் காட்டுகின்றது.

### சிவத்தல யாத்திரை செய்த நோக்கம்

கடவுள் ஒருவரே எல்லாமாய் எங்குமாய் நிறைந்துள்ளார். சோவில்களிலுள்ள கல்லிலும் செம்பிலும் மாத்திரமா கடவுள் இருக்கிருர் என்று நாம் ஆங்காங்கு சென்று வணங்கவேண்டும்? நாம் இருக்கும் இடத்திலேயே இருந்துகொண்டு கண்ணைமூடிக் கடவுளைத் தியானித்தால் அது கடவுள் வழிபாடு ஆகாதா? என்று இக்காலத்தில் சிலர் கேட்க நினைக்கலாம். அவர்களுக்கெல்லாம் கூடிய பதில் இதுதான். குணங்கடந்தவர் கடவுள். குணங்களுக்கு உட்பட்டவன் மனிதன். கடவுள் இல்லாத இடமில்லை. மனிதன் ஒரே நேரத்தில் இரு இடங்களில் தாமும் இருக்க முடியாது. மனிதனுக்கு முக்குணங்களும் மாறிமாறிவந்துகொண்டே இருக்கும். பசுவின் மடியில் மாத்திரந்தான் பால் இருப்பதில்லை. அதன் உடம்பெங்குந்தான் ஜீவசக்தியாகிய பால் உள்ளது. ஆயினும் அதன் மடியிலேயே பால் சுரக்கிறது. அவ்வாறே எல்லாமாய் எங்குமுள்ள இறைவனைத் தலந்தோறும் உள்ள திருக்கோவில்களிலே சென்று தரிசிப்பதனலேயே இறைவன் திருவன் திருவருளை மக்கள் இலகுவாகப்பெறலாம். இந்த உண்மையைக் காட்டுவதற்காகவே அப்பர் சுவாமிகள் போன்ற மகாஞானிகளும் சிவத்தல யாத்திரை செய்தார்கள்.

மனிதன் குறிக்கோள் இல்லாமல் வாழுதல்கூடாது. சுகமாக வாழ்வதே மனிதனது குறிக்கோள் என்பது எவராலும் மறுக்க முடியாது. உலகில் துன்பமே இல்லாமல் எப்பொழுதும் இன்பம் அனுபவிப்பவரும் இல்லை; ஒருபோதும் இன்பமின்றி என்றும் துன்பத்திலேயே வருந்துபவரும் இருக்க முடியாது. இன்பத்தின் முடிவு துன்பமாவதையும், துன்பமுடிவில் இன்பந்தோன்றுவதையும் உலகில்காணலாம். ஆகவே நிலையற்ற இன்பத்தை விட்டு நிலையான இன்பம் பெறுவதே மனிதவாழ்வின் இலட்சியமாகவேண்டும். அது இறைவன் திருவருளின்றிக் கைகூடுமாறு இல்லை. "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று அப்பர் சுவாமிகள் கூறியது எதனல்? "தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன், நற்சங்க வெண்குழை ஓர் காதிற் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாயினமையால்" என்று அடுத்து முத்திரை இடுகிருர். நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் சிவன் தாள் நினைக்கமுடியாமல் உலகியற் தொழிற்பாடுகள் எம்மிடையேவந்து குறுக்கிட்டு மறக்கச் செய்கின்றன. சரண கமலாலயத்தை அரை நிமிடநேரந்தானும் மனம் ஒருவழிப்பட்டுத் தியானிக்கமுடிவதில்லையே என்கிருர் அருணகிரி நாதர். அதனலேயே சிவதல யாத்திரை செய்யும் பழக்கத்தை மக்கள் மேற்கொண்டு உய்தியடையட்டும் என்று கருத்துக்கொண்ட நாவேந்தர் தாமே தல யாத்திரை செய்தார்.

### முக் கரணப் பணி

மனத்தினல் சிவபிரான் திருவருள் திறத்தை நினைத்தல், வாக்கினல் சிவநாமங்களை—திருவருட்பிரபாவங்களை ஓதுதல், காயத்தால் சிவப்பணி விடைசெய்தல் ஆகிய இவை மூன்றையும் நாவுக்கரசர் தாம் பாடிய தேவாரப்பாசுரங்களில் அமைத்துக் காட்டியுள்ளார். "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்குநிற்கும் பொன்னர் சடைப்புண்ணியன்" என்று தனித் திருக் குறுந்தொகையிலும்; "பணைக்கை மும்மத வேழமுரித்தவன், நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்று கோயில் - திருக் குறுந்தொகையிலும்; "நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை" என்று திருவங்கமாலையிலும்; "நெஞ்சம்உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்" என்று திருவதிகை வீரட்டானப் பாசுரத்திலும்; "கரவாடும் பெருமானை" என்று தொடங்கும் திருக்கச்சியேகம்பப்பாசுரம் பத்திலும் இறுதியடிதோறும் "என் மனத்தே வைத்தேனே" என்றும் அப்பர் சுவாமிகள் மானசிக வழிபாட்டை விளக்கமாகக் காட்டியுள்ளார். இன்னும் பல இடங்களில் உண்டு. குறித்தால் கட்டுரை மிக விரியும்.

"சலம்பூவொடு" என்று தொடங்கும் திருவீரட்டானப் பாசுரத்தில் "உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்" என்றும்; "வாயே வாழ்த்து கண்டாய் மதயானை உரிபோர்த்துப் பேய் வாழ் காட்டகத்தாடும் பிரான் தன்னை வாயே வாழ்த்து கண்டாய்" எனத் திருவங்கமாலையிலும்; "நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என நமச்சிவாயத் திருப்பதிகத்திலும்; "படைக்கலமாக வுன்னமத் தெழுத்தைந் சென் நாவிற் கொண்டேன்" எனக் கோயில் திருவிருத்தத்திலும்; "பரவு கொப்பளித்த பாடல் பண்ணுடன் பக்தர் ஏத்த" என்று கொப்பளித்த திருநேரிசையிலும்; "பண்ணினைப் பாடவைத்தார் பத்தர்கள் பயிலவைத்தார்" என்றும்; "ஊனப்பேர் ஒழிய வைத்தார் ஓதியேஉணர வைத்தார் ஞானப்பேர் நவில வைத்தார்" என்றும்; திருக்கழிப்பாலைப் பாசுரத்திலும்: இன்னும் இப்படியே பல பாசுரங்களில் வாக்கின் மன்னர் வாக்கினற் செய்யும் பணியை வடித்துக் காட்டியுள்ளார்.

நாவேந்தர் தாசமார்க்கத்தைத் தழுவியவராதலின் தாம் நியதியாகச் செய்யும் சரியைத் தொண்டுக்குரிய கருவியாக உழவாரப்படையை எப்போதும் தமது கையிற் கொண்டிருந்த தன்மை காயத்தாற் செய்யும் பணியைக் காட்டுவதற்கேயாம்.

"குனித்த புருவமும்
கொவ்வைச்செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும்
பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த
பொற் பாதமுங்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே இந்த
மா நிலத்தே"

எனக் கண் பெற்றதனலாய தரிசனச் சிறப்பைப் படம் வரைந்து காட்டுவது போல உரைத்துள்ளார். மேலுந் திருவங்கமாலையில் தலைமுதல் கால் ஈருகக் காயத்தின் உறுப்புக்களாற் செய்ய வேண்டிய பணியை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இன்னும் உடம்பையே இறைவன் எழுந்தருளிய் திருக்கோயிலாகப் பாவிக்க (நினைக்க) வேண்டுமென்பதை;

"காயமே கோயிலாகக் கடி
மனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணியிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய
நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனர்க்குப்போற்றவிக்
காட்டினேமே"

என்றும்

"உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால்
எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே"

என்றும்

தனித்திரு நேரிசையிற் கூறியுள்ளார். இவையெல்லாம் திருநாவுக்கரசு நாயனர் பெற்றுக் காட்டிய திருவருட்பேறுகள் என்பதை நாமெல்லாம் மனத்துட் கொண்டு அவற்றைப் பின்பற்றி வாழ்ந்து சிவபிரான் திருவருளைப் பெற்றுச் சிறப்படைவோமாக.

---

### சுதந்திரமும் சுயதேவைப் பூர்த்தியும்

சுதேசி உணர்ச்சி நாட்டிலிருந்து வெகு விரைவில் மறைந்து வருகிறது என்று சிலர் கூறுகின்றனர். இந் நிலை உண்மையில் பரவி விட்டால் நம் உயிரினும் இனிய சுதந்திரம் வெகு நாள் நிலைக்காது என்றே அஞ்சுகிறேன். ஆசியாவின் ஜோதியாக விளங்க வேண்டிய இந்தியா, அப்பெருமையை பறிகொடுத்து விட வேண்டியதுதான். படாடோபம் எங்கும் பரவியுள்ளது என்று ஒரு நண்பர் நொந்து கொள்கிருர். அயல் நாட்டு மோகமும் ஆடம்பர வாழ்க்கையும் ஒன்றுக் கொன்று துணையானவை. இப்பரிதாபகரமான நிலை நகரங்களில் இருப்பது உண்மையானாலும், கிராமங்களில் இருக்கக் கூடாது என்பது தான் என் ஆசை. வறுமையினலாவது, கிராமங்களில் இந்நிலை பரவி விடக் கூடாது.

கதரே சுதேசியின் மையம்; கதர் மறைந்தால் சுதேசி நிலைக்காது.

நமது முதல் சுதந்திரப் போராட்டத்தின் போது அயல் நாட்டுத் துணியைக் கொழுத்தியதை நினைத்துப் பாருங்கள். அந்த மனப்பான்மையும் உணர்ச்சியும் இன்றில்லை என்பது வருந்தத்தக்கதே.

சுதேசி உணர்வு நமக்கு இருந்தால் நம் முக்கியமான தேவைகளுக்கு அயல் நாட்டுப் பொருள்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். உணவு உடை ஆகிய இரு தேவைகளையும் நம் நாடே பூர்த்தி செய்து கொள்வது முற்றிலும் அசாத்தியம் என்பது நிரூபிக்கப் பட்டால், அவற்றை இறக்குமதி செய்வதில் எனக்குத் தடையில்லை. ஆனல் இந்தியாவே அத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது என்பது நிரூபிக்கப்படவில்லை. நம் நாட்டிலுள்ள லட்சக்கணக்கான கிராமங்களில் நமக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்வதுடன், கதரையும் உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்று சிறிதும் தயக்கமின்றிக் கூறுவேன். ஆனல், நம்மை நாமே நம்பி நம் தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடிவும் என்ற உறுதியை இழந்து சோம்பலுக்கு அடிமையாகி விட்டோம். உணவு உடை ஆகிய இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மேல் நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை விட, உடையின்றி பட்டினியால் வாட நான் சித்தமாயிருக்கிறேன்.

அசையாத உறுதி இல்லாவிடில் நம் கடமையைச் செய்வது இயலாது.

— காந்தியடிகள்

# சிறுவர் பூங்கா

இது ஒரு கதை

## அணிலும் புணிலும்

— பாலன் —

அது மனிதர்கள் இல்லாத ஒரு பெரிய காடு. அங்கு மரங்களும், செடிகளும் அடர்ந்து வளர்ந்து இருந்தன. அக்காட்டில் மிருகங்களும், பறவைகளும் ஏராளமாகச் சீவித்து வந்தன. அக்காட்டின் மத்தியில் ஒரு பெரிய சிவன் கோவில் இருந்தது. அக்கோவில் மிகப் பழையதாக இருந்ததால் இடிந்து கிடந்தது. அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு ஆலமரம் பெரிதாக வளர்ந்து நின்றது. அந்த மரத்தில் ஒரு அணிலும் புணிலியும் நீண்ட காலமாகச் சீவித்து வந்தன. நீண்ட காலமாகச் சீவித்து வருவதினால் இரண்டும் நல்ல நட்பாக இருந்தன.

ஒருநாள், நடுப்பகல் இரண்டும் சிவன் கோவில் வாசலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தன. வெயில் அகோரமாக இருந்தது. அதனால் இருவரும் இரை தேடவும் போகவில்லை. வெயில் அகோரத்தால் இருவருக்கும் தண்ணீர்த் தாகம் வந்து விட்டது. ஆனால் தண்ணீர் குடிப்பதற்கு சமீபத்தில் ஆறோ, குளமோ இல்லை. இரண்டு மைல்களுக்கப்பால் சென்றால் தான் குளத்தைக் காணலாம். இரண்டு மைல்களுக்குச் செல்வதென்றால் இருவருக்கும் பெரும் சங்கடமாக இருந்தது. இருவருக்கும், ஒவ்வொரு நாளும் தண்ணீர் குடிக்கும் பிரச்சினை தான் பெரிய பிரச்சினையாக இருந்தது. இருவரும் இருந்து யோசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரெனப் புணிலுக்கு ஒரு யோசனை வந்தது. தாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு கிணறு தோண்டி விட்டால் நல்லது என்பது தான் அந்த யோசனை. அதை அணிலுக்கும் கூறியது. அணில் உடனே சம்மதித்து விட்டது. உடனே இருவரும் சிவபெருமானை வணங்கி விட்டுக் கிணறு தோண்டப் புறப்பட்டனர். கோயிலுக்குப் பின்னால் ஒரு சிறு வெளி இருக்கிறது. அதில் கிணற்றைத் தோண்டுவது என இருவரும் முடிவு செய்தனர். முதலில் புணில் உற்சாகத்தோடு தோண்டத் தொடங்கியது. தோண்டத் தோண்டக் களைப்பு அதிகரித்தது. புணிலால் தோண்ட முடியவில்லை. உடனே தன்னால் கிணறு தோண்ட முடியாது என்று கூறிக் கொண்டு வெளி வந்து விட்டது. அணிலுக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது. 'நீ வராவிட்டால் போ! நானே தோண்டி முடிக்கிறேன்' என்று கூறிக்கொண்டு தொடர்ந்து தோண்டிக் கொண்டிருந்தது.

அணில் ஒவ்வொரு நாளும் விடாமல் வேலை செய்து கொண்டு வந்தது. ஒரு மாதத்தில் கிணறு தோண்டி முடிக்கப்பட்டது. கிணறு தோண்டி முடித்த கடைசி நாள் அணிலுக்குக் களைப்பு அதிகமாக வந்துவிட்டது. வயிறு நிரம்பக் கிணற்று நீரைக்குடித்துவிட்டு, மரநிழலில் நித்திரை கொண்டு விட்டது. அணிலுக்குத்தான் கிணறு தோண்டி முடித்ததில் பெரிய ஆனந்தம். தன்னை மறந்து நல்ல நித்திரை கொண்டது. அணில் கஷ்டப்பட்டுத் தோண்டும் போது புணில் வெளியில் இருந்து பார்த்துக் கொண்டேயிருக்கும். எந்த உதவியும் செய்யாது, சோம்பேறி போலத் தூங்கிக் கொண்டிருக்கும்.

அணில் நித்திரை செய்வதைப் புணில் கண்டு விட்டது. உடனே அதற்கொரு யோசனை எழுந்தது. கிணற்றுள் குதித்து சேற்றைத் தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டு வெளிவந்தது. பின்னர் சிவன் கோவிலுக்கு முன்னால் ஓடிப் போய் நின்றது. "சிவபெருமானே, நான் தான் கஷ்டப்பட்டுக் கிணற்றைத் தோண்டினேன். என் கோலத்தைப் பாருங்கள்" என்று கூறி வணங்கியது. புணிலின் குரல் கேட்டதும் சிவபெருமான் சடாமுடியுடன் தோன்றினார். "யார் கிணறு தோண்டியவன்" என்று அமைதியோடு கேட்டார். புணில், "நான் பெருமானே" என்று பக்தியோடு கூறியது. "சரி அணில் எங்கே?" என்று சிவபெருமான் கேட்டார். "அவன் அங்கே தூங்குகிறான்" என்று புணில் கூறியது. சிவபெருமான், "அவனை இங்கு கூட்டி வா" என்றார். உடனே புணில் நித்திரை கொண்ட அணிலை அழைத்து வந்தது. சிவபெருமான் அணிலைப் பார்த்து ஒரு சிரிப்புச்சிரித்தார். அணில்புணிலைப் போல இல்லாமல் வழமை போல் சுத்தமாகவே இருந்தது. "உங்களில் யார் கிணறு தோண்டியவன்" என்று சிவபெருமான் அணிலைப் பார்த்துக் கேட்டார். அணில் பயபக்தியோடு "பெருமானே உங்களுக்குத் தெரியுமே!" என்றுகூறியது சிவபெருமான் புணிலைப் பார்த்தார். புணில் பயத்தால் நடுங்கிக் கொண்டு நின்றது.

சிவபெருமான் அணிலைப் பக்கத்தில் அழைத்தார். அதன் முதுகில், தன் விரல்களால் மூன்று வெள்ளைக் கோடுகள் இட்டார். "நீ உண்மையாக உழைத்ததினால் எந்த உயரத்தில் இருந்து விழுந்தாலும் சாகமாட்டாய்" என்ற வரத்தை அளித்தார். புணிலைப் பார்த்தார். "நீ சோம்பேறியாக இருந்தாய்; இன்னொருவன் செய்ததை நீ செய்ததாகப் பொய்யும் சொன்னாய். ஆகையால் நீ நடக்கமுடியாமல் கத்திக்கத்தித் திரிவாய்" என்று சாபமிட்டு மறைந்தார். புணில் அழுதுகொண்டு தத்தித்தத்திச் சென்றது. அணில் அதைப் பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டு நின்றது.

### மூவேந்தர்கள்

ஆசிரியர்:- குமார் மூவேந்தர்கள் யார், யார்?

குமார்:- ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர், நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன், நடிப்பிசை மன்னர் பி. யூ. சின்னப்பா.

ஆசிரியர்:- ...... ! ! !

அனுப்பியவர்:
நா. இரஞ்சிதமணி,
உரும்பராய்.

### ஒரு வார்த்தை

சுறுசுறுப்பாயிரு; ஆனல்,
படபடப்பாயிராதே.
பொறுமையாயிரு; ஆனல்,
சோம்பேறியாயிராதே.

— கி. ஆ. பெ. விசுவநாதம்.

### அறிவியல்

மனிதன் தனிப்பட்ட பண்பாட்டைக் கூர்ந்து ஆராய்ந்து அவன் வாழ்க்கைக்கென சிறந்த குறிக்கோள்களை வகுத்துத்தரும் துறையில் இலக்கியத்தைப் போலவே அறிவியலும் நன்கு பணியாற்ற முடியும் என்பது என் நம்பிக்கை. மனிதப் பண்பாட்டிலுள்ள ஒற்றுமைகளையும் முரண்பாடுகளையும் அலசிப்பார்ப்பதே பெரும் எழுத்தாளர்களின் தொழிலாகும். இவ்வாறு நுணுகி ஆராயும் தன்மையில் அறிவியல் இலக்கியத்திற்குச் சிறிதளவும் சளைத்ததல்ல

—ஜே. ப்ரொனௌஸ்கி

### சாந்தி நிலவ

உலகம் ஒரு குடும்பம்போல வாழலாம். சத்தியத்தையும், அஹிம்சையையும் என்று மக்கள் கடைப்பிடித்து நடக்க முற்படுகிறார்களோ, அன்றுதான் உலகிலும், உலக மக்கள் மனத்திலும் சாந்தி நிலவும். —காந்திஜி


26%

நீண்டகால உபயோகத்திற்கு

புதிய எவரெடி ரேடியோ பாட்டரிகள்




★ இலங்கை எங்கும் இப்பொழுது கிடைக்கும்.

★ புகழ் மிக்க புதிய எவரெடி மினிமாக்ஸ் ரேடியோ பாட்டரி.

★ 26% அதிக சக்தி உள்ளவையாகையால்........ நீண்டகால உழைப்புக்கு உகந்தவை.

கவர்ச்சிகரமான சிவப்பு, நீல வர்ணமுள்ள கவர்களையுடைய புதிய எவரெடி மினிமாக்ஸையே பார்த்து வாங்குங்கள்!

தங்க நிறமுடைய அடையாள முத்திரை இருக்கிறதா என்றும் பார்த்து வாங்குங்கள் அதுவே பாட்டரி விற்பனைக்கு முதல் பரீட்சிக்கப்பட்டதற்கு அத்தாட்சி.

உத்தரவாத அடையாளம் தங்க நிற முத்திரை. அதை அவதானித்து வாங்குங்கள்!

தங்க நிற அடையாள முத்திரைதான் உத்தரவாத அடையாளம்.

★ ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் 4-00 — 4-30 மணிக்குமிடையில் நடைபெறும் எவரெடி இசைக்களஞ்சியம் நிகழ்ச்சியைக்கேட்டு ரசியுங்கள்.

# இளம்பிள்ளை வாத நோய் அபாயம் முற்றுகத்தீரவில்லை

## பெற்ருேர் கண்காணிப்பாக இருக்க வேண்டும்

—சுகாதார இலாகா அறிக்கை

கொழும்பு, சனி.

'இளம்பிள்ளை வாதநோய் பரவுதல் முற்றுகத் தடுக்கப்பட்டு விட்டதாக சில பொய்வதந்திகளை நம்பி மக்கள் இதுபற்றி அஜாக்கிரதையாக இருந்துவிடுவதாகத் தெரிகிறது. ஆனால் உண்மை அப்படியல்ல'.

சுகாதார இலாகா பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கண்டிருப்பதாவது:

போதியளவு வாதநோய் தடுப்பு மருந்து கைவசமிருப்பதால் சகல பெற்ருேரும் தமது பிள்ளைகளுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

வாதநோய் பரவத்தொடங்கிய நாளிலிருந்து ஏப்ரல்24-ம் திகதி வரை லேடிறிஜ்வே ஆஸ்பத்திரியில் இதுவரை இந்நோயால் பீடிக்கப்பட்ட 377 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பொழுதுகூட நாளொன்றுக்கு சராசரி மூன்றிலிருந்து ஐந்து வரையான நோயாளர் லேடி றிஜ்வே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் படுகின்றனர். இதற்கிடையில் இலங்கையின் மற்றப் பகுதிகளிலிருந்து, 86 பேருக்கு இந்நோய் பரவியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1957-ம் வருடத்தில் 334 பேரே இந்நோயினுல் பீடிக்கப்பட்டிருந்தனர். அதற்குப்பின்னர் இவ்வருடம் தான் அதிகமானேர் இந்நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடம் இதுவரை 463 பேர் இந்நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மாதங்களை விட இந்த மாதம் இந்நோய் ஓரளவு குறைவாகவே பரவி வந்திருந்தாலும் இந்நோய் பரவுவதை முற்றிலும் ஒழித்து விட்டதாகக் கூறிவிட முடியாது. முக்கியமாக கொழும்பிலும் மேற்கு மாகாணத்திலும் இந்நோய் பரவுவதற்கான அறிகுறிகள். காணப்படுகின்றன.

கொழும்பிலுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் வாதநோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதல் தடவை ஊட்ட மருந்தைப் பெற்ற பிள்ளைகள் இரண்டாவது தடவையும் இந்த மருந்தை உட்கொள்வது அவசியம். ஊட்ட மருந்து வழங்கும் நிலையங்களில் 4 விருந்து 8வார இடைக்கால எல்லைக்குள் இந்த மருந்தை மீண்டும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

வாதநோய் பரவாமல் தடுப்பதில் பெற்ருேரும் சுகாதார இலாகாவினரோடு ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரப்படுகின்றனர்.

—

## லிண்டன் ஜான்சன் விமான விபத்தில் தப்பினுர்

லாடாஸ், ஏப். 28

அமெரிக்க உப-ஜனுதிபதி திரு. லிண்டன் ஜான்சனையும் அவரது மனைவியையும் ஏற்றி வந்த விமானம் இறங்கிய போது விமான இறங்குதுறையைவிட்டு விமானம் அப்பால் சென்று சேற்றினுள் புதைந்தது. இதனுல் ஏற்படவிருந்த விபத்து தெய்வாதீனமாக நிகழாதுபோய்விட்டது.

விமானத்திலுளள கியரிலேற்பட்ட கோளாறினுலேயே இவ்விதம் விமானம் இறங்குதுறை எல்லையைக் கடந்து அப்பால் சென்றது எனத் தெரிவிக்கப் பட்டது.

—

## கோவில் திருட்டுவழக்கில் எதிரிக்கு சிறை

பருத்தித்துறை,-சனி

தும்பளை முருகையன் கோவில் திருட்டு வழக்கில் எதிரியாகிய தும்பளையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை மரியதாஸ் என்பவருக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினுர்.

நீதிபதி தீர்ப்பு வழங்குகையில் எதிரி மீது சுமத்தப்பட்ட 3 குற்றச் சாட்டுக்களில் மூன்ருவது குற்றச்சாட்டைத் தவிர ஏனையவை ருசுப்படுத்தப்படவில்லையெனவும் கோயிலுக்குச் சொந்தமானவையெனத் தெரிந்தும் மனிதரை மட்டுமல்ல கடவுளையுமே அபாவனை பண்ணிவிட்டீர் என எதிரியைப் பார்த்துக் கூறினுர்.

—

## நீதிபதிகளுக்கு சிங்கள பரீட்சை

கொழும்பு. வெள்ளி

1959ம் வருடத்துக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட நீதியரசர்களுக்கும், மாஜிஸ்திரேட்டுகளுக்கும் சிங்கள தகுதிப் பரீட்சை ஒன்றை நடத்த நீதிபரிபாலன சேவைக் கமிஷன் தீர்மானித்துள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களில் நடத்தப்படவிருக்கும் இப்பரீட்சையை கமிஷனுல் நியமிக்கப்பட்ட ஒரு விசேஷ சபை நடாத்தும்.

ஜி. ஸி. ஈ.(சாதாரண) பரீட்சைத் தராதரத்துக்கு அமைய இந்தப் பரீட்சையின் தரம் இருக்கும்.

நீதிஸ்தலங்களில் அரசகரும மொழி அமுலாக்கப்படவேண்டின் இன்னும் மூன்று வருடங்களில் நீதியரசர்களும், மாஜிஸ்திரேட்டுகளும் சிங்களத்தில் தகுதி பெற்றிருக்க வேண்டும் என கமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# டாக்டர் ஜெயசூரியா யாழ்ப்பாணம் விஜயம்

## பதக்கம் வழங்கி கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

இலங்கை கயரோகநிவாரண தேசிய சங்கத்தின் தலைவரான டாக்டர் ஜே. ஏச். எப். ஜெயசூரியா மே மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்ய விருக்கிருர். இவருடன் இச்சங்கத்தைச் சேர்ந்த மற்றும் சிலரும் வரவிருக்கின்றனரெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு வாரம் தங்கியிருக்கும் இவர்கள் இங்குள்ள கிளைச் சங்கங்களின் வருடாந்தக் கூட்டங்களிலும் கயரோக தேசிய தினக் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வதோடு கயரோக நிவாரண வேலை சம்பந்தமாகவும் ஆராய்ந்து செல்வர்.

காமல் வெல்த் பதக்கதை அண்மையில் பெற்ற டாகடர் ஜெயசூரியாவுக்கு ஓர் பாராட்டுபசார் மளிக்கவும் பதக்கம் வழங்கவும் இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்குக்கிளை முடிவு செய்தி திருப்பதாகத் தெரிகிறது.

இக் கிளைச் சங்கத்தின் அழைப்பை ஏற்று இங்குவரவிருக்கும் டாக்டர் ஜெயசூரியாக்கோஷ்டியினர் நிகழ்ச்சிநிரல் ஏற்பாடுகளை காரியதரிசி திரு. உ. ந. தேவகடாட்சம் செய்துவருகிருர்.

## ரூ. 6 லட்சம் செலவில் கோவாவில் பாலம்

புதுடில்லி, ஏப். 28

பாரதம் கோவாவை மீட்டுக்கொண்டதன் பின்னர் இங்கு முதன்முதலாகக் கட்டப்பட்ட பாலம் நேற்றுத் திறக்கப்பட்டது.

சாண்டிபாரில் ரூ. 6 லட்சம் செலவில் வெகு குறுகியகாலத்தில் கட்டப்பட்ட இந்தப்பாலம் பஞ்சிமுக்கும் கோலாமுக்கும் தொடர்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

—

## புளியங்கூடலில் திருவுருவத்திற்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, சனி

யாழ்நகருக்கு எழுந்தருளியிருக்கும் புளியம் பொக்கணை ஸ்ரீநாகதம்பிரான் திருவுருவத்திற்கு சென்ற வியாழக்கிழமை காலை புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

சரவணை - புளியங்கூடல் கிராமமக்கள் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

# இன்று ஜப்பானின் தேசிய தினம்

கொழும்பு, ஞாயிறு.

இன்று ஜப்பான் நாடு தேசியதினம் கொண்டாடுகிறது. ஹிரே—ஹித்தோ மன்னரின் 61 வது பிறந்த தினமும் இன்றேயாகும்.

இலங்கையிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் திரு. யசுசுக் கற்சூனேவுக்கும் திருமதி. கற்சுனேவுக்கும், இங்குள்ள ஏனைய ஜப்பானியர்களுக்கும் அவர்களது இலங்கை நண்பர்கள் இன்று ஒரு விருந்தளிப்பார்கள்.

—

## அணு ஆயுத சோதனைக்குஆட்சேபம்

ஜப்பான், ஏப். 28

அமெரிக்கா அணு ஆயுத சோதனையை நடத்துவதை ஆட்சேபிக்குமுகமாக நேற்று ஜப்பானில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## மூதூரில் தமிரசுக்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியாக்கிரக இயக்கத்தில் லெந்து கொண்டு உழைத்த திரு. த. ஏகாம்பரம் திடீரெனக் காலமானதால் ஏற்பட்ட காலிஸ்தானத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெற விருக்கிறது

### அபேட்சகர் யார்?

மூதூர்த் தொகுதி இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி யாரை அபேட்சகராக நிறுத்த உத்தேசித்துள்ளதென்று இன்னும் திட்டவட்மாக அறிவிக்கப்படவில்லை யாயினும் முன்னுள் எம். பி. ஜனுப் முகம்மது அலியையே கட்சி நிறுத்தக் கூடிமென நம்பப்படுடுறது.

நாளைக் காலை நடைபொறும் செயற்குழுக் கூட்டத்தில் இறுதி முடிவு செய்யப்பட்ட பின் மாலையில் திருமலையில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டததில் அபேட்சகருடைய பெயர் அறிவிக்கப்படும்.

மூதூர்த்தொகுதிக்கு இன்று விஜயம் செய்துள்ள தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அங்கு ஜனுப் முகம்மது அலிக்கு ஆதரவு எப்படியிருக்கிறதென்பதையும் ஆராய்ந்து வருவர்.

## சனசமூக நிலைய 13-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிவியாதெரு சனசமூக நிலையம் (காந்தி நிலையம்) 13-வது ஆண்டுநிறைவுவிழாவை இன்று மாலை கொண்டாடவிருக்கிறது.

முன்னுள் நகரபிதா திரு. க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல பேச்சாளர்கள் கலந்து கொள்வார்கள்.

இன்று நடைபெறும் 1962-ம் வருட தாச்சிச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு டாக்டர். திருமதி துரையப்பா பரிசில்களை வழங்குவார்.

—

## மொழியை திணித்துவிட முடியாது

—வில்மட் பெரேரா

கொழும்பு, வெள்ளி

"ஒரு மொழியையோ ஒரு சமயத்தையோ மக்கள் மீது திணித்துவிட முடியாது என நான் எப்பொழுதும் கருதி வந்துள்ளேன்" என் திரு. வில்மாட் பெரேரா சோனக இஸ்லாமிய கலாசார இல்லத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வில்மட் பெரேரா மேலும் பேசுகையில்

சிறுபான்மையிரின்மொழிக்கு பெரும்பான்மையினர் கௌரவமளிக்கக்கூடாது என்பது நியதியல்ல எனக் கூறினுர்.

—

## நெடுஞ்செழியன் மூர்ச்சியடைந்தார்!

சென்னை, ஏப். 27

தமிழ்நாடு சட்டசபை (கீழ்சபையில்) எதிர்க் கட்சித் தலைவர் இரா. நெடுஞ்செழியன் இன்று கவர்னரின் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று மயக்கமடைந்தார். சில நிமிடங்களின் பின் அவர் மூர்ச்சை தெளிந்தார்.

2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ரஞ்சன் — ராஜசுலோசன
நடித்த
ராஜா மலயசிம்மன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது